

# வெள்ளி

மாதம் இருமுறை

15 - 8 - 72

சதம் 30

## எம். ஜி. ஆர். – சிவாஜி ரசிகர்களுள் ஒற்றுமை வருமா?



பொலிசார் என்னைப் பேசவிடவில்லை

--- அமிர்



எமது ஈழவள நாட்டின் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை வாழ்த்துகிறேன்!

அவர் செய்யும் பல காரியங்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறவர்கள் உண்டு,

ஆனால், யாருமே சந்தேகிக்க முடியாத ஒரு அரும் பெரும் தியாகத்தைச் செய்து காட்டியிருக்கிறார் ஸ்ரீமாவோ.

நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் மூலம், தான் உண்மையான ஒரு சோசலிஸவாதி என்பதை — யாருமே உருட்டிப் புரட்ட முடியாத வகையில் பிரதமர் நிரூபித்துவிட்டார்!

ஒன்றல்ல; இரண்டல்ல; ஆயிரத்து முன்னூறு ஏக்கர் நிலம் தமது கையைவிட்டுப் போகிறதே என்று அவர் சிறிதும் தயங்கவில்லை. கொள்கைக்காக அத்தனை பெரிய நிலப்பரப்பை இழக்கத் துணிந்திருக்கிறாரே அவர்! ஆயிரம் ஏக்கர் நிலத்துக்குமேல் அதிபதியாக, ஒரு ஜமீன்தாரிணிப் போல, வாழ்ந்தவர், ஒரு சாதாரண ஐம்பது ஏக்கர் பிரசையாக மனமுவந்து மாறிவிட்டாரே, அவரை வாழ்த்துவதில் நான் பெருமைப்படுகிறேன்.

—தி. ச. வரதராசன்,
ஆசிரியர்.

## பொலிசார் என்னைப் பேசவிடவில்லை!

— அமிர்தலிங்கம் 2-ம் பக்.

## எம். ஜி. ஆர்.-சிவாஜி ரசிகர்கள் ஒற்றுமை?

4-ம் பக்.

**தோழர் வ. பொன்னம்பலத்துடன் பேசுங்கள்!**

விபரங்கள் 32-ம் பக்கம்

ந. சந்திரமோகன் எழுதிய 'நீங்களும் பேச்சாளராகலாம்' என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த 29–7–72ல் நடைபெற்றது. அந்த விழாவில் தமிழரசு அமிர்தலிங்கமும், தோழர் வ. பொன்னம்பலமும் உரையாற்றுவதாக இருந்தது. ஆனால் அன்று அவர்கள் பேசுவதைப் பொலிசார் தடுத்துவிட்டதாக அறிந்தேன். ஒரு அநீதி நடந்து விட்டது போல உணர்ந்தேன். அமிர்தலிங்கம் அவர்களிடம் இது பற்றிச் சில கருத்துக்களைக் கேட்டேன். எனது கேள்விகளும் அமிரின் பதில்களும்:

# பொலிசார் என்னைப் பேசவிடவில்லை!

— அமிர்தலிங்கம்

கேள்வி : கடந்த 29-7-72-ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ''நீங்களும் பேச்சாளராகலாம்'' என்ற புத்த வெளியீட்டு விழாவில் நீங்களும் உரையாற்றுவதாக நோட்டீஸில் காணப்பட்டது. பின்னர், அந்தக் கூட்டத்தில் நீங்கள் பேசுவதைப் பொலிசார் அனுமதிக்கவில்லையென்று 'வீரகேசரி'யில் ஒரு செய்தி வெளிவந்தது. உண்மைதானா?''

அமிர்.: ''உண்மைதான்!''.

கே.: ''அந்தக் கூட்டத்தில் பேசவேண்டாமென்று பொலிசார் நேரடியாக உங்களுக்கு அறிவித்தார்களா? அல்லது.....''

அமிர்.: ''என்னிடம் நேரடியாகக் கூறவோ, பகிரங்கக் கூட்டம் நடக்கும் இடத்தில் வந்து தடுக்கவோ பொலிசாருக்குத் துணிவிருக்கவில்லை. விழாவை ஒழுங்குசெய்தவர்களைஎப்படியோ மிரட்டி அவர்கள் மூலம் எனது பேச்சை நிறுத்திவிட்டார்கள்!''

கே.: ''பேசக் கூடாதென்பதற்கு ஏதாவது காரணம் அறிவித்தார்களா?''

அமிர்.: சம்பந்தப்பட்டவர்கள் என்னிடம் சொன்னது: நான் சட்ட விரோதமாக பிரிவினைக் கருத்துகளைப் பேசிவருகிறனாம்; என்னைப்பேச அனுமதித்தால் ஒலிபெருக்கிக்கு அனுமதி தரமுடியாதென்று பொலிசார் சொன்னார்களாம் — இது முக்கிய காரணம்...''

கே.: ''இது நியாயமான ஒரு காரணமென்று நினைக்கிறீர்களா?''

அமிர்.: ''ஆட்டைக் கடிப்பதற்கு 'நீ செய்யாவிட்டால் உன் அப்பனாவது செய்திருப்பான்' என்று சொன்ன ஓநாய் நியாயந்தான்.....எங்கேயாவது கூட்டங்களில் நான் சட்ட விரோ

தமாய் பேசியிருந்தால் — பேசியிருந்தால், அதற்காக வேண்டிய நடவடிக்கையை எடுத்திருக்கலாம். அதை விட்டுவிட்டு, ஒரு புத்தக வெளியீட்டு விழாவில், நான் பேசவிருந்ததைத் தடுப்பது என்ன நியாயமோ தெரியவில்லை!''

கே.: ''இப்படிச் செய்ததற்காக, உங்களை அவமதித்தாக பொலிசார்மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க முடியாதா?''

அமிர்.: அதற்கு எவ்வித வழியுமில்லை. பொலிசார் என்னுடன் நேரடியாக எவ்வித தொடர்பும் கொள்ளவில்லை. அல்லாமலும் அவசர காலச் சட்டம் இப்போது நடைமுறையிலிருக்கிறது. இந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு அவர்கள் நினைத்ததையெல்லாம் செய்யமுடிகிறது!

கே.: ''சாதாரண பேச்சுச் சுதந்திரத்தைகூட தடைசெய்யும் இந்த அவசரகாலச் சட்டம் தனி மனித சுதந்திரத்தை எவ்வளவு கடுமையாகப் பாதிக்கிறதென்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு உதாரணமாக விளங்குகிறதல்லவா?

அமிர்.: ''நிச்சயமாக! அவசர காலச் சட்டத்தை வைத்துக் கொண்டு இந்த அரசாங்கம் தனக்கு எதிரான சக்திகளையெல்லாம் கட்டிப்போட்டு வைத்திருக்கிறது!''

கே.: ''உங்களைப் பேசவிடாமல் தடுத்ததற்கு முக்கிய காரணம் இது என்று சொன்னீர்களே; வேறு ஏதும் காரணமும் அறிவிக்கப்படாதா?''

அமிர்.: ''ஓமோம், அதே கூட்டத்தில் திரு. வி. பொன்னம்பலமும் பேசுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. நாங்கள் இருவரும் ஒரே மேடையில் பேசினுல் அதனுல் குழப்பம் ஏற்படுமென்றும் பொலிசார் சொன்னுர்களாம்!''

கே.: ''அது ஒரு நியாயமான காரணமல்லவா?''


அமிர்.: ''ஒரு போதுமில்லை. அது அரசியல் கூட்டமல்ல; புத்தக வெளியீட்டு விழா. அந்தப் புத்தகத்தைப்பற்றித்தான் நான் அங்கே பேசியிருப்பேன். அல்லாமலும், நண்பர் பொன்னம்பலத்தை பக்கத்தில் வைத்துக்கொண்டு, காரணமின்றி அவரைத் தாக்கிப் பேசுவது போன்ற பண்பற்ற செய்கைகளை நான் செய்திருக்க மாட்டேன். நண்பர் பொன்னம்பலமும் நாகரிகம் தெரிந்தவர். கௌரவமாகக் குறித்த விஷயத்தை மட்டும் பேசியிருப்பாரென்றே நம்புகிறேன். நாங்களிருவரும் ஒரே மேடையில் அன்று பேசியிருந்தாலும் எவ்வித குழப்பமும் நேர்ந்திருக்காது! அப்படி எத்தனையோ கூட்டங்களில் பேசியுமிருக்கிரேம்.''

கே.: ''ஒரு வேளை ....''

அமிர்.: ''சரி; ஒரு வேளை அவர்கள் நினைப்பது போல ஏதாவது நடக்குமென்று எதிர்பார்த்திருந்தால், அதற்கேற்ற பாதுகாப்புகளைச் செய்து கொண்டு எங்களைப் பேச அனுமதித்திருக்கலாம். அதை விட்டுவிட்டு எமது பேச்சுரிமையை மறுத்திருப்பது கோழைத்தனம்!''


''நன்றி. 'வெள்ளி' வாசகர்கள் சார்பாக!''

எம். ஜி. ஆரும், சிவாஜி கணேசனும் ஒரு வரை ஒருவர் பாராட்டிப் புகழ்ந்து வாழ்த்தி, நட்புறவை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். இந்த உறவுக்காட்சியினால்.......



# எம். ஜி. ஆர்.-

# -சி வா ஜி



# ரசிகர்கள் ஒற்றுமை வருமா?

எம். ஜி. ஆரை அகில இந்திய சிறந்த நடிகராகத் தெரிவு செய்து 'பாரத்' என்ற பட்டத்தை வழங்கிற்று இந்திய அரசு.

இதை அறிந்து பொங்கியவர்கள் இரண்டு விதமானவர்கள். சிலர் மகிழ்ச்சியினால் பொங்கினார்கள். மற்றும் சிலர் ஆத்திரத்தினால், பொறாமையினால் பொங்கினார்கள்.

ஆத்திரப்பட்டவர்களின் இலக்காக சிவாஜி கணேசனைத் தான் எல்லாரும் நினைத்துக் கொண்டார்கள்.

எம். ஜி. ஆரை 'மக்கள் திலகம்' என்று தான் எல்லோரும் போற்றுகிறார்கள். ஆனால் சிவாஜியையோ 'நடிகர் திலகம்' என்றே போற்றுகிறார்கள்.

"'பாரத்' என்ற பட்டம் மக்களுக்குச் செய்த சேவைக்காக வழங்கப்படுவதல்ல, நடிப்புத் திறமைக்காகவே வழங்கப்படுகிறது. நடிப்புத் திறமைக்காக வழங்கப்படும் பட்டம், நடி-

கர் திலகத்துக்குக் கிடைக்காமல் மக்கள் திலகத்துக்குக் கிடைப்பது எப்படி நியாயமாகும்?'' என்றெல்லாம் பொருமினார்கள் சிவாஜி ரசிகர்கள்.

அரசியல் காரணங்களுக்காக எம். ஜி. ஆரை ஒதுக்கிவிட நினைக்கும் 'சோ' போன்றவர்கள் 'பாரத்' பட்டத்துக்கான தேர்வுசம்பந்தப்பட்ட வரலாற்றையே ஒரு கலக்குக் கலக்கிப் பார்த்தார்கள்.

எதிர்க்கட்சியில் இருப்பினும் கண்ணதாசன் மட்டும் ஒரு கவிஞனுக்கே உரிய நேர்மைச் சிறப்புடன் சொன்னார், 'ஒரு தமிழனுக்கு இந்தப் பட்டம் கிடைத்திருக்கிறதே என்று நினைத்து மகிழ்வோம்!' என்று.

தென்னிந்திய நடிகர் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அதன் இப்போதைய தலைவர் சிவாஜி கணேசன். 'தென்னிந்திய நடிகர் ஒருவருக்கு அகில இந்தியச் சிறப்புப் பட்டம் கிடைத்திருக்கும்போது, தென்னிந்திய நடிகர் சங்கம் என்ன செய்யப் போகிறது?' என்று எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

நடிகர் சங்கத்தின் பெயரால் சிவாஜி கணேசன் ஒரு விழா எடுத்தார். 'பாரத்' பட்டம் பெற்ற எம். ஜி. ஆருக்கு பாராட்டுக் கூட்டம் நடத்தினார்.

இருகரங்களும் நீட்டி எம். ஜி. ஆரை மேடைக்கு அழைத்துக் கட்டித்தழுவினார். பொன்னாடை போர்த்தி, கேடயம் வழங்கினார்.

சிவாஜி வென்று விட்டார்! உயர்ந்த மனிதன் ஆகிவிட்டார்! எம். ஜி. ஆரும் மனம் திறந்து உள்ளம் உருகிப் பேசியிருக்கிறார். 'என்னையும் சிவாஜியையும் வைத்து விளையாடப்பார்க்கிறார்கள் சிலர். எங்களுக்குள் பகைமையை மூட்டி விட ஒருவராலும் முடியாது. அரசியலில் எங்கள் வழி வெவ்வேறுதான். ஆனால் நாங்கள் இருவரும் நடிகர்கள்; கலைஞர்கள். கலை உலகில் நாங்கள் சகோதரர்கள். இந்த 'பாரத்' பட்டமல்ல, இதை விடச் சிறந்த பட்டங்களை சிவாஜி பெற வேண்டும். நான் அவரை எனது மனங்குளிரப் பாராட்ட வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன்' என்று கூறியிருக்கிறார் எம். ஜி. ஆர்.

பெரியவர்கள் இருவரும் பெரியவர்களாகவே நடந்து கொண்டார்கள்.

ஆனால் இவர்களுடைய உள்ளம் உருக்கும் பேச்சுக்களாலும், கட்டித்தழுவி அணைத்த காட்சிகளாலும், இவர்களுடைய ரசிகர்கள் ஒற்றுமைப்படுவார்களா?


அது நடக்கப்போவதில்லை!

---

அடுத்த இதழில்! சிறு கதை

**குழந்தைகள் விளையாடுகிறார்கள்!**

— பொ. சண்முகநாதன் —



சினிமாவுக்கு வரமுன்னரே நாடகங்களின் மூலம் ரசிகர்களிடையே பெரிய நட்சத்திரமாகத் திகழ்ந்தவர் எம். ஆர். ராதா. அவருடைய 'இழந்த காதல்' என்ற நாடகம் கோயம்புத்தூரில் மட்டும் இரண்டு வருடங்கள் சலிக்காமல் நடைபெற்றது. சமீபத்தில் வெள்ளி விழா நினைவுக்காக அதே நாடகத்தை ராதாவின் மகன் வாசு நடத்தினார். கூட்டமே சேரவில்லை! ஆனாலும், 'நடிப்பிலே அப்பாவையும் மிஞ்சி வெற்றி பெறுவேன்!' என்று துணிந்து கூறியிருக்கிறார் வாசு!

கலைஞர் கருணாநிதி 'முரசொலி'யை நடத்தியதுபோல, மதியழகன் 'தென்னகம்' என்ற பத்திரிகையை வாரப்பதிப்பாக நடத்தி வந்தார். 'முரசொலி' தினசரிப் பத்திரிகையாக மாறி, கருணாநிதியின் மருமகன் 'முரசொலிமாற'னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 'தென்னகம்' மதியழகனின் தம்பி கிருஷ்ணசாமியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 'தென்னக'மும் இப்போது தினசரிப் பத்திரிகையாக வெளிவருகிறது.

யாழ். நகரமண்டபத்தில் நவீன சினிமாத்தியேட்டர் அமைக்கப்பட்டு விட்டது. அசைஸ் நீதிமன்றத்தின் விசாரணைகள் முடிந்து விட்டதால், இப்போதைக்குப் பிரச்சினையும் தீர்ந்துவிட்டது. ஆறுமாதகாலத்துக்கு தியேட்டர்காரருடன் மாநகரசபை ஒப்பந்தம் செய்திருக்கிறது. அதற்கு மேல் ஒப்பந்தத்தை நீடிக்காமல் விட்டால், அடுத்த அசைஸ் நீதிமன்றமும் இதே மண்டபத்தில் நடக்கலாம். ஆனால் தொடர்ந்து தியேட்டர் இருக்குமானால் மீண்டும் நீதிமன்றத்துக்கான இடப்பிரச்சினை எழும். ஆறுமாதகாலத்துக்குள் புதிய நீதிமன்றக் கட்டிடம் அமைக்கப்படுமென்றும் எதிர்பார்க்க முடியாது!


மோட்டார் வாகனங்களுக்கான நூதனசாலை ஒன்றை இப்போதுபிரிட்டனில்தொடங்கியிருக்கிறார்கள். 1895-ம் ஆண்டு தொடக்கம் பிரிட்டனில் உற்பத்திசெய்யப்பட்ட பலவிதமான மோட்டார்வாகனங்களையும் இங்கே காட்சிக்காக வைத்திருக்கிறார்கள். சுமார் 300 விதமான வாகனங்கள் இங்கே நிரந்தரமாக வைக்கப்பட்டிருக்கிறது. இவற்றின்பெறுமதி மட்டும் 5 லட்சம் பவுண்ட்ஸ் என்கிறார்கள்!

மக்கள் சீனா இலங்கைக்கு ஆயுதஉதவியை மட்டும் இலவசமாகச் செய்யவில்லை. பாடசாலை விஞ்ஞான கூடங்களுக்குத் தேவையான பலவித உபகரணங்களையும் சீனா இலங்கைக்கு நன்கொடையாகத் தந்திருக்கிறது. இந்த உபகரணங்களின் பெறுமதி பத்துலட்சம் ரூபா!


மதுவிலக்கு ஒழிக்கப்பட்ட பிறகு, தமிழ் நாட்டில் பத னீர் சேர்ப்பது குறைந்துவிட்ட தென்றும், எங்கு பார்த்தாலும் சாராயக்கடை கள்ளுக்கடை விளம்பரங்கள் காணப்படுகின் றன என்றும், இதனுல் பல இளைஞர்கள் புதிதாகக் குடிப் பழக்கத்தை ஆரம்பித்துள்ளார்க ளென்றும் இலங்கை காந்தீய சேவா சங்கச் செயலாளர் வேலா யுதபிள்ளை சொல்லியிருக்கிருர். வட இந்தியாவிலும் தென்னிந்தி யாவிலும் பரவலாகச் சுற்றுப் பயணம் செய்துவிட்டுவந்திருக் கும் வேலாயுதபிள்ளை பிரம்மச் சாரி. காந்தி பக்தர். கிளி நொச்சி உருத்திரபுரத்தில் ஒரு ஆச்சிரமம் வைத்து நடத்தி வரு கிருர்.

மலைநாட்டு மஸ்கெலியா கல் விவட்டாரத்தைச் சேர்ந்த 33 சிங்களப் பாடசாலைகளின் அதிபர்களும் ஆசிரியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரு டன் இம்மாதம் 13ம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றனர். மொத்தம் 95 பேர். மூன்று விசேட விமானங்களில் வருகி ருர்கள். யாழ்ப்பாணப்பகுதியிலு ள்ள முக்கியமான இடங்களுக் கெல்லாம் விஜயம் செய்யவிருக் கும் இக்கோஷ்டியினர் இங்கு ள்ள முககிய பிரமுகர்களைச் சந் தித்து அளவளாவ இருக்கிருர் கள். இவர்களுடைய இந்த விஜ யம் குறித்து 28 பக்கங்கள் கொண்ட மலர் ஒன்றையும் சிங் களத்தில் வெளியிட்டிருக்கிருர் கள். மஸ்கெலியாவிலுள்ள த. சிவபாதம் என்ற தமிழாசிரியரே இந்தச் சுற்றுலாவுக்கான பல ஏற் பாடுகளைச் செய்திருக்கிருர். சிங் கள மக்கள் இவ்விதம் யாழ்ப் பாணப் பகுதிக்கு வந்து தமிழ் மக்களுடன் அளவளாவுவதை வரவேற்க வேண்டும். அப்போது தான் தமிழ் மக்களுக்குச் செய் யப்பட்டுள்ள குறைகளைச் சிங்க ளப் பொது மக்கள் உணருவதற் குச் சந்தர்ப்பம் ஏற்படும். தமிழ் மக்களுடைய போராட்டங்களுக் குச்சிங்களப் பொதுமக்களின் ஆதரவு கிடைக்கும். ஆனுல் சந் தர்ப்பத்தைச் சரிவரப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்!

எதிர் நீச்சல் டைரக்டர் கே. பாலச்சந்தர் அரசாங்க கணக்குப் பரிசோதனைப்பகுதி யில் ஒரு அதிகாரியாகக் கடமை யாற்றிக் கொண்டே 'ராகினி ரிக்ரியேஷன்' மூலம் நாடகங்க ளைத்தயாரித்துக் கொண்டிருந்



தார். அந்த நாடகங்களில் சில திரைப்படமாகி வெற்றியும் பெற் றன. ஆனுலும், சினிமாத்துறை யை நம்பி, அரசாங்க உத்தியோ கத்தைக் கைவிடப்பயந்து கொண் டிருந்தார். ஏ. வி. எம். மெய் யப்பசெட்டியார், 'துணிந்து வாருங்கள். உங்களுக்கு நிச்சய மாக நல்ல எதிர்காலம் இருக்கி றது. நான் உத்தரவாதம் தரு கிறேன்' என்று உற்சாகப்படுத் தினுர். வேறு நண்பர்களும் தைரியமூட்டினுர்கள். பாலசந் தர் அரசாங்க உத்தியோகத்து க்கு முழுக்குப் போட்டுவிட்டு, சினிமாத்துறைக்கே வந்துவிட் டார்!



கிருபானந்த வாரியாரின் தந்தையாரும் ஒரு சிறந்த பேச்சாளர். ஒரு நாள் குறிப்பிட்டிருந்த பேச்சுக்கு அவரால் போக முடியவில்லை. பதினைந்தே வயது நிரம்பிய கிருபானந்த வாரியார் தந்தைக்குப்பதிலாக அன்று பேசி, நிறையப்பாராட்டுக்களையும் பெற்றார். அன்றிலிருந்து தொடங்கியவர்தான். இன்றுவரை அந்தமேகம் தமிழைச் சைவத்தில் தோய்த்து பொழிந்து கொண்டேயிருக்கிறது! சமயச்சொற்பொழிவுகளை இவ்வளவு கவர்ச்சிகரமாகப் பேசி எல்லாத்தரத்தினரையும் மயக்கியவர்கள் வேறு எவரும் இல்லை!

தொலைபேசிப் பரிவர்த்தனை (டெலிபோன் எக்சேஞ்ச்) நிலையங்களில் வேலை செய்யும் ஊழியர்கள், தூர இடத்து அழைப்புகள் பலவற்றையும் இலவசமாகவே எடுத்துக் கொள்கிறார்கள். தமக்கு மிக வேண்டியவர்களுக்கும் இலவசமாக எடுத்துக் கொடுக்கிறார்கள். இனிமேல் இப்படிச் செய்ய முடியாது. இப்படி இலவச 'கோல்' எடுப்பவர்களைக் கண்டுபிடிக்கக்கூடிய கருவி ஒன்றை எல்லா நிலையங்களிலும் பொருத்தப் போகிறார்கள். களவாகக் 'கோல்' எடுப்பவர்களை இந்தக் கருவி கண்டுபிடித்துக் கொடுத்துவிடும்!

அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரதான தூண். தேசிய அரசப் பேரவையில் அரசாங்கத்துக்கு விடும் கண்டனங்களுக்கெல்லாம் ஓரளவு நின்று நிமிர்ந்து பதில் கொடுப்பவர் பீலிக்ஸ்தான். பாவம், இவர் திருமணம் செய்து 17 வருடங்களாகியும் இவருக்கு குழந்தைப்பேறு இல்லை. இப்போது ஒரு குழந்தையை தத்து எடுத்து வளர்க்கிறார். அந்தக் குழந்தை ஆண் குழந்தையல்ல; பெண் குழந்தை! பெண்குழந்தை தான் பிற்காலத்தில் தமக்கு ஆதரவாக இருப்பாளென்பதை அமைச்சர் நன்றாகச் சிந்தித்துத் தெரிவு செய்திருக்கிறார்!

காணி உச்ச வரம்புச் சட்ட மூலம் அரசாங்கம் சுமார் நாலு லட்சம் ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும், 'சரியான திட்டமெதுவும் இல்லாவிட்டால் இந்த நாலு லட்சம் ஏக்கர் காணியில் பெரும்பகுதி யாருக்கும் பயனற்று வீணாகிவிடும்' என்று எச்சரித்திருக்கிறார் வவுனியா எம். பி. எக்ஸ். எம். செல்லத்தம்பு. உண்மைதான். இந்த நாலு லட்சம் ஏக்கர் காணியையும் சரியான முறையில் உடனடியாகப் பகிர்ந்து உழைப்பாளிகளிடம் கையளிக்க வேண்டும். அப்படிக் கையளிக்கப்படும் காணிகளில் உடனடியாக உற்பத்தியை வளர்ப்பதற்கான திட்டங்கள் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் இந்த நாட்டுக்கு பெரிய நட்டந் தான் வந்து சேரும்!

அரசாங்கம் வெளியிட்ட தமிழ் மொழிப்பாடப் புத்தகங்களுக்கு இது வரை 'தமிழ் மலர்' என்று பெயரிடப்பட்டிருந்தது. இதை இனிமேல் 'தமிழ்' என்று மட்டுமே போடப்போகிறார்கள். சிங்கள மொழிப்புத்தகங்களுக்கு 'சிங்கள' என்றுதான் பெயர். ஆங்கில மொழிப் புத்தகங்களுக்கும் 'இங்கிலிஸ்' என்றுதான் பெயர். இப்படிப் பார்க்கும் போது தமிழ்மொழிப்புத்தகங்களுக்கும் 'தமிழ்' என்று தான் பெயர் வைக்க வேண்டும். ஆனாலும் வெறுமனே 'தமிழ்' என்று இருப்பதைவிட 'தமிழ் மலர்' என்று இருப்பது அழகாகத்தானிருக்கிறது. இது ஒரு புறமிருக்க, முன்பு தனியார் துறையினர் பாடப்புத்தகங்கள் வெளியிட்டுக்கொண்டிருக்கும் போது, அடிக்கடி புத்தகங்களை மாற்றப்பட்டு மாணவர்களுக்குச் சிரமமேற்படுவதாக ஒரு குறை சொல்லப்பட்டது. அந்தக்குறை இப்போது அரசாங்கம் வெளியிடத் தொடங்கியும் தீரவில்லை. அநேகமாக வருடாவருடம் புத்தகங்களை மாற்றிக்கொண்டுதானிருக்கிறார்கள்!

சென்னை ஆனந்த் தியேட்டர் உரிமையாளர் உமாபதி சமூகத்தின் அடித்தளத்திலிருந்து சுயமுயற்சியால் மேல் தட்டிற்கு வந்திருப்பவர். பள்ளிப்படிப்பே இல்லாதவர். ஆயினும் 'உமா' என்ற பெயரில் ஒருமாத சஞ்சிகையைச் சில காலம் நடத்தியவர். ஆளைப்பார்த்தால் 'வில்லன்' டைப்பாக இருப்பார். ஆனால் மது அருந்த மாட்டார். சிகரட் கூடக் குடிக்கமாட்டார்!

கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடந்த தமிழர் கூட்டணிக் கூட்டத்தில் யாரோ ஒரு இளைஞர், கூட்டணிக்கு எதிரான துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்தார். கூட்டத்தில் சிலர் அவரைத் தடுத்தார்கள். அவரைச்சும்மா விடும்படி சிவசிதம்பரம் கேட்டுக்கொண்ட போதிலும் கூட்டத்தினர் அந்த இளைஞரை பலவந்தமாக அப்புறப்படுத்திவிட்டனர். தொடர்ந்து பேசிய ஆனந்தசங்கரி "அந்த இளைஞர் சுயாட்சிக்கழக நவரத்தினத்தின் ஆளாக இருக்



கும்" என்றார். அமிர்தலிங்கம் அதை மறுத்து "இல்லை, அவர் ஒரு கம்யூனிஸ்ட் ஆள்" என்றார். இந்த இரண்டு தலைவர்களுமே தவறு செய்திருக்கிறார்கள். சுயாட்சிக்கழகம் தமிழ் மக்களிடையேயுள்ள இன்னொரு கட்சி. கம்யூனிஸ்ட் கட்சியிலும் அநேக தமிழர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டு கட்சிக்காரர்களின் ஆத்திரத்தையும் இந்தத் தலைவர்கள் தூண்டிவிட்டிருக்கிறார்கள். தமிழர் கட்சிகளெல்லாம் ஒற்றுமைப்பட்டு வரும் நேரத்தில் இப்படிச் சில கட்சிகளைக் கூட்டணியின் எதிரிகள் என்று பகிரங்கமாகவே ஒதுக்கித்தள்ளுவது அழகல்ல; சிறந்த ராஜ தந்திரமுமல்ல: திட்டுவதைக் குறைத்துத் தட்டிக் கொடுத்துக் காரியம் பார்க்க வேண்டிய நேரமிது!

# மண்ணுலகத்து ஓசைகள்

கலாநிதி க. கைலாசபதி

சென்னையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த பழம்பெரும் பத்திரிகையாகிய 'சுதேசமித்திரன்' சமீபத்தில் மூடப்பட்டது பலரும் அறிந்த செய்தியாகும். கிரிக்கெட் விளையாட்டிலே துடுப்பெடுத்து அடிப்பவர் நூறு 'ஓட்டங்கள்' பெற்றால் குறிப்பிடத்தக்க சாதனையாய்க் கருதப்படுவது போல, மனிதர் நிறுவும் தாபனங்கள் நூற்றாண்டுகள் நிலைத்திருப்பதும் பெருமைக்குரியதாய்க் கொள்ளப்படும். நூற்றாண்டு நிறைவைக் காண இன்னும் பத்தாண்டுகளும் இல்லாதவேளையில் அப்பத்திரிகை நின்று போனது ஒருவகையில் கவலைக்குரியதே ஆகும்.

பிரபல ஆங்கிலப் பத்திரிகையான 'ஹிந்து' நிறுவியவர்களில் ஒருவரான ஜி. சுப்பிரமணிய அய்யரே, 'சுதேசமித்திரன்' பத்திரிகையைஆயிரத்துஎண்ணூற்று எண்பத்துஇரண்டில் (1882) ஆரம்பித்தார். சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்தே 'உதயதாரகை', 'தினவர்த்தமானி' முதலிய பத்திரிகைகள் தொடங்கப் பெற்றிருந்த போதும் தினசரி என்ற சொல்லின் நவீன அர்த்தத்தில் எழுந்த முதலாவது தமிழ்ப் பத்திரிகை 'சுதேசமித்திரன்' என்றே கூறவேண்டும். யாழ்ப்பாணத்தில் வெளிவந்த 'உதயதாரகை' பத்திரிகைக்குஆ. சதாசிவம் பிள்ளையும், 'தினவர்த்தமானி'க்கு சி. வை. தாமோதரம்பிள்ளையும் ஆசிரியராய்இருந்திருக்கின்றனர். ஆனால் சமூக, பொருளாதார, அரசியல் விஷயங்களை ஆதாரமாய்க் கொண்டு இயங்கத்தொடங்கிய முதல் பத்திரிகை 'சுதேசமித்திரன்' என்பதில் ஐயமில்லை.

ஆரம்பத்தில் வார இதழாகவே அப்பத்திரிகை வெளிவந்தது. 1897-ல் வாரம் மும்முறைவெளிவரத்தொடங்கி, 1899-ல் தினசரிப் பத்திரிகையாயிற்று. இக்காலப்பகுதியில் 'ஹிந்து' ஆசிரியர் குழுவிலிருந்து இளைப்பாறிய சுப்பிரமணிய அய்யர் தமது முழுக் கவனத்தையும் 'சுதேசமித்திர'னுக்குச் செலவிட்டார்; அதன் ஆசிரியராக அவர் அமர்ந்திருந்த காலத்திலேயே, 1904-ல் சி. சுப்பிரமணிய பாரதி என்ற - இருபத்திரண்டு வயது நிரம்பிய துடிப்புமிக்க இளைஞனொருவன் - சுப்பிரமணிய அய்யரின்கீழ் உதவி ஆசிரியனாக வேலைக்கமர்ந்தான். - மகாகவி பாரதியின் பத்திரிகைப் பயிற்சி அங்குதான் பெறப்பட்டது.

தேசப்பற்றுக் கொண்டதாயும், அதற்கேற்ற பெயரைத் தாங்கியதாயும் 'சுதேசமித்திரன்' விளங்கிய பொழுதும், தொடக்க முதல் இறுதிவரை அது நிதானக் கொள்கையைக் கைக்கொண்டே வந்தது. அதன் காரணமாகவே பாரதி அங்கு நீண்டநாள் பணிபுரிய இயலவில்லை. ஏறத்தாழப் பதினைந்து வருட இடைவெளிக்குப்பின் 1920-ல்தான் 'அரசியல் வேகம் தணிந்த' பாரதி, காந்திய யுகத்தில் மீண்டும் சுதேசமித்திரனில் உதவியாசிரியராகச் சேர்ந்



தார். ஆனால் ஒரு வருடம் முடியுமுன் இறந்துவிட்டார். எனினும் மகாகவி பாரதியின் கவிதைகள் கட்டுரைகள் பலவற்றைத் தாங்கி வெளிவந்த பாக்கியம் அப்பத்திரிகைக்குண்டு.

இன்றைய ''வெகுஜன'' சாதனங்களான 'தினத்தந்தி' 'குமுதம்' முதலியவற்றை நோக்கும்போது அக்காலத்தில் பத்திரிகைகளின் விற்பனை அற்ப சொற்பமாகவே தெரியும். உதாரணமாக, தொடங்கப்பெற்ற ஆண்டு முடிவில் சுதேசமித்திரனின் 'ஸர்குலேஷன்' ஆயிரத்து ஐந்நூறு (1500) பிரதிகள். அதற்கு அடுத்தபடியாக அதிகம் விற்பனையாகிய பத்திரிகை 'தினவர்த்தமானி' 784 பிரதிகள்.

பிற்காலத்தில் சுதேசமித்திரனின் பிரதிகள் பல்லாயிரக்கணக்கில் பரவியபோதிலும் 'மாபெரும்' பத்திரிகையாக அது விளங்கவேயில்லை. குறுகிய சில நியமங்களும் வரம்புகளும் அப்பத்திரிகையின் உள்ளார்ந்த பலவீனங்களாய் இருந்து வந்துள்ளன. 'சுதேசமித்திரன்' வைரவிழாக் கொண்டாடியவேளை சுதேசமித்திரனுக்கு அறுபது ஆண்டுகள் நிறைவெய்தியதை அறிவிக்கும் சுவரொட்டிகள் சென்னை நகரெங்கும் காணப்பட்டன. சில தினங்களில் மற்றுமொரு சுவரொட்டி எங்கும் காணப்படலாயிற்று. ''தினமணி அவ்வளவு கிழடு தட்டியதல்ல'' என்பது எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் ஹாஸ்யம் பொதிந்த விளம்பரமாயிருந்தது. அதில் ஓரளவு கிண்டலும் குத்தலும் கலந்திருந்தன. உண்மையும் இருந்தது. ஏ. என். சிவராமனைப் போல ஒருவர் சுதேசமித்திரனுக்கு வாய்க்கவில்லை.

தமிழ்ப்பத்திரிகை உலகில் நவீனத்துவத்தைப் புகுத்திய சுதேசமித்திரன் ஏகபோக உரிமை நிறுவனங்களின் போட்டிக்கு முகங்கொடுக்க இயலாது போயிற்று. 1859-ல் தென்னிந்தியாவில் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையில் வண. ஜே. லோங் என்பவர், 'முதல் தமிழ்ப்பத்திரிகை 1833-ல் வெளிவரத் தொடங்கியது' எனக் குறிப்பிட்டிருக்கிறார். பல பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டன, ஆனால் பத்திரிகை உலகில் 'இளம் பிள்ளை மரணம்' அதிகம் எனவும் குறிப்பிட்டிருக்கிறது. அன்றும் இன்றும் அது பொருந்தும் போலும்! எனினும் விடாப்பிடியுடன் முதுமையிலும், தடியூன்றி நடந்து வந்த 'சுதேசமித்திரன்' நூறு வயதை அடையுமுன் கண்மூடிவிட்டது!

பஞ்சாங்கத்திலிருந்து நூல்கள் வெளியீடு வரை பற்பல 'பிரசார விற்பனை' உத்திகளைக் காலத்துக்குக் காலம் சுதேசமித்திரன் பரீட்சித்துப் பார்த்தது. ஆனால் இறுதியில் இன்றைய தமிழ்நாட்டு அரசியல் நிலைமையை எதிர்நோக்க இயலாமல் இழுத்து மூடிக்கொண்டு படுத்துவிட்டது. அதன் ஆத்மா சாந்தியடைக!



■ புரக்டர் எஸ். சிவசுப்பிரமணியம் என்ற பெயர் செய்திப்பத்திரிகை படிக்கும் எல்லாருக்கும் தெரிந்திருக்கும். இத்தனைக்கும் இவர் ஒரு அரசியல் கட்சித்தலைவரல்லர். எந்த ஒரு அரசியல் கட்சியிலும் உறுப்பினரும் அல்லர். ஆயினும் அரசியல் நிலைமையை மிக ஊன்றிக்கவனித்து அவ்வப்போது பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவார். அறிக்கையாக இல்லாவிட்டால் 'ஆசிரியருக்குக் கடிதம்' என்ற பகுதியிலாவது இவருடைய கருத்துக்கள் வெளிவரும். இவர் சமீபத்தில் விடுத்த அறிக்கையொன்றில் சிங்கள, முஸ்லீம் தலைவர்களுடன் தமிழர் கூட்டணியினர் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று கருத்துத் தெரிவித்திருக்கிறுர். சந்தர்ப்பத்துக்கேற்ற அருமையான யோசனைதான். ஆனுல் பூனைக்கு மணி கட்டுவது யார் என்பது தான் பிரச்சினை!

■ உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டை 1973 ஜனவரி—7ம் திகதி தொடக்கம் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணத்தில் விமரிசையாக நடத்துவதென்று ஏற்கெனவே தீர்மானித்திருந்தார்கள், ஆனுல் சமீபத்தில் கூடிய அமைப்புக் குழுவில் இது சாத்தியமில்லையென்று முடிவாகியிருக்கிறது. இலங்கைத் தமிழர்களின் அரசியல் சூழ்நிலையை வைத்தே இந்தமுடிவு எடுக்கப்பட்டதாம். தமிழர் கூட்டணியின் போராட்ட மேகம் கருக்கொண்டு வருகிறது. 1973 ஜனவரிக்கு இன்னும் 4 மாதங்களே இருக்கின்றன. மகாநாட்டைத் தொடங்க மழையும் வந்து விடக்கூடு மென்ற பயம் நியாயமானதுதான். ஈழத்தமிழகத்துக்கு ஒரு உலகப்புகழ் வர வேண்டிய சந்தர்ப்பம் தவறிக் கொண்டே போகிறதே!

■ அரசாங்க ஊழியர்களுக்காக வருடமொன்றுக்கு 200 கோடி ரூபா செலவாகிறது. இவ்வளவு செலவுக்கும் ஏற்ற பலன் கிடைக்கவில்லை. 'ஊழியர்களில் பலர் தங்கள் சம்பளத்துக்கு ஏற்ற கடமையைச் செய்வதில்லை. ஊழல்கள் அதிகரித்து விட்டது. கடமையைச் சரிவரச் செய்யாத ஊழியர்களுக்கு மன்னிப்பே கிடையாது!' என்று எச்சரித்திருக்கிறுர் பீலிக்ஸ். எச்சரிக்கையைவிட ஊழல்கள் தோன்றியதற்கு மூலகாரணத்தை அறிந்து, அதை நீக்குவதற்கான முயற்சியை மேற்கொண்டால்தான் பலன் கிடைக்கும்!

■ சினிமா நடிகர்களுக்கு கடிதம் எழுதும் பெண்களில், கல்லூரிகளில் படிக்கும் பெண்களே காதல் கடிதங்களை எழுதுகின்றனர். அதிகம் படிக்காத பெண்கள் அப்படியொன்றும் எழுதுவதில்லை; மரியாதையுடன் தங்கள் அபிமானத்தைத் தெரிவிக்கின்றனர். படித்த பெண்கள் பலருக்கு காதலிப்பதும் ஒரு விளையாட்டு!

# நளினியின் நாயகன்

'வரதர்'

**முன்பு:** நள்ளிரவு 12 மணி, படுக்கையில் நித்திரை யில்லாமல் புரண்டுகொண்டிருக்கிருள் நளினி. திருமணமாகிச் சில மாதங்களே ஆகியிருந்த அவளுடைய கணவன் வேலாயுதம் ஏதோ அலுவலாக அன்று மாலேதான் யாழ்ப்பாணம் போயிருக்கிருன். அவன் ஒரு ஆஸ்த்மா நோயாளி. சூது விளையாட்டுக்குத் தன்னைப்பலிகொடுத்தவன்.

சுந்தரத்தின் கடிதத்தைச் சுற்றி நளினியின் எண்ணங்கள் படருகின்றன. அந்த நினைப்பில் அவளுக்கு ஒரு இன்பம். அவளுக்கும் சுந்தரத்துக்கும் திருமணப்பேச்சு நடந்த போது எழுதப்பட்ட கடிதம் அது. நளினியின் தகப்பனர், சின்னத்தம்பி, அவன் ஒரு 'கம்யூனிஸ்ட்' என்பதால் தமது மகளை அவனுக்குக் கொடுக்க விரும்பவில்லை.

சின்னத்தம்பி யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிருர். தேர்தலில் தோற்றுப்போனதால் யாழ்ப்பாணத்தில் இருக்க வெறுப்புற்று, இந்தியா யாத்திரை போய்வர அவர் தீர்மானிக்கிருர். அதற்கான 'பாஸ்போட்'டை எடுப்பதற்காக கொழும்புக்கு வந்திருக்கிருர். சுந்தரம் மூலமாக முயற்சித்தால் மிகச்சுலபமாகப் பாஸ்போட் கிடைக்குமென்று, அவருடைய நண்பர் சொல்ல, அவனுடன் தொடர்பு கொள்கிருர். சுந்தரம் அன்று மாலையில் தங்கள் வீட்டுக்கு வரப்போவதை அறிந்த நளினி பரபரக்கிருள். அவனுடன் எப்படிக்கதைப்பது, 'அந்தக்' கடிதத்தை எப்படிக் கொடுப்பது என்றெல்லாம் நெடுநேரமாகக் கற்பனை செய்கிருள்.

அன்று மாலையில் சுந்தரம் வந்து, சின்னத்தம்பியிடம் பாஸ்போட்டைக் கொடுக்கிருன். சுந்தரத்துடன் தகப்பனர் பேசிக்கொண்டிருந்த போது, நளினியும் கூட இருந்து அவர்கள் பேச்சில் கலந்து கொள்கிருள். சுந்தரத்தைப்பற்றி நல்லபிப்பிராயம் சின்னத்தம்பியின் மனத்தில் மேலும் வளர்கிறது. சுந்தரம் விடைபெற்றுத்திரும்பும் போது, தகப்பனருக்குத் தெரியாமல் 'அந்தக்' கடிதத்தை அவனிடம் கொடுத்து விடுகிருள் நளினி.

அடுத்த நாள் மரகதம்மா என்ற வயோதிபப்பெண், நளினியின் வீட்டுக்குவந்து, வேலாயுதம் தனக்கு ஐநூறுரூபாவும் வட்டியும் தரவேண்டுமென்று கேட்கிருள்.

சின்னத்தம்பி ஒரே பார்வையில் நளினியின் முகத்தைப் படித்துவிட்டவராக தானே மரகதம்மாவுக்குப் பதில் சொல்கிறுர். 'இதிலே பிள்ளை என்ன மறுமொழி சொல்ல ஏலும்?....கலியாணம் முடிச்சு ஆறுமாசம்கூட ஆகேல்லே; அதுக்குள்ளே இது என்ன கரைச்சல்கள்!... மருமேன் இன்னும் இரண்டு மூன்று நாளிலே வந்துவிடுவார். அவர் வரவிட்டிக்கு அவரிட்டைக்கேள். பிள்ளையிட்டை இந்தக் கதையெல்லாம் வேண்டாம்!'

''மரகதம்மா குத்தலாகச் சொல்கிறுள்: ஐயா கோபிக்கிறுர் போலே, நான் என்ன செய்வன் முட்டுப்பட்டனுன்...''

''சரி, சரி; அந்தக்கதையெல்லாம் எதுக்கு?... அவர் வரவிட்டிக்கு அவரிட்டைக் கேட்டு வாங்கு...இப்பபோயிட்டு வா!''

இதற்குமேல் அங்கே நிற்பதில் எவ்வித பயனுமிருக்காது என்பதை உணர்ந்துகொண்ட மரகதம்மா, ''ஓமையா, நான் வாறன்'' என்று எழுந்து வாயிலே நோக்கி நடந்துகொண்டே, ''அந்தரம் ஆபத்துக்கெண்டு குடுத்துப் போட்டு... இப்ப அலேஞ்சுலேய வேண்டிக் கிடக்கு,.. நான் வாறன் பிள்ளை'' என்று தன்பாட்டில் சொல்லிக்கொண்டு வெளியேறுகிறுள். அவள் போனதும் கதவைச் சாத்திக் கொண்டு திரும்பிய நளினி, தகப்பனுரைப் பார்க்க அஞ்சியவள்போல மறுபக்கம் பார்த்துக்கொண்டு வருகிறுள்.

''இதெல்லாம் என்ன நளினி?'' என்ற தகப்பனுரின் குரலைக் கேட்டுத் திரும்பி அவரைப் பார்த்த நளினி, மறுகணமே எதுவும் பேசாமல், முகத்தைத் திருப்பிக்கொண்டு படுக்கையறையை நோக்கி ஓடுகிறுள்.

அவள் முகத்தைப் பார்த்த சின்னத்தம்பியும் எதுவும் பேச விரும்பவில்லை. உள்ளேயிருந்து நளினியின் விசும்பல் சத்தம் எதுவும் கேட்காவிட்டாலும், அவள் அழுதுகொண்டிருக்கிறுளென்பதை அவரால் உணரமுடிகிறது. பெற்ற மனத்தில் வேதனை பொங்குகிறது. ஆனுலும் அவளைத் தேற்றுவதற்கென்று அவர் எழுந்து உள்ளே போகவில்லை. அவர் தாயல்ல; தகப்பன்; 'அழட்டும், அழுவதனுல் அவள் மனப்பாரம் குறையட்டும்' என்று நினைக்கிறுர் அவர்.

## 5

அடுத்த நாள்காலே. சின்னத்தம்பி நேற்று மாலேயே யாழ்ப்பாணத்துக்குப் போய்விட்டார். வேலாயுதம் இன்னும் வரவில்லை.


நேற்றுப் பகலும், இரவில் கொஞ்ச நேரமும் நளினி ஒரே சோகமயமாக இருந்தாள். மரகதம்மா வந்து போனதிலிருந்து அவளுக்கு ஒரே யோசனை. மரகதம்மாவின் கடன் ஒன்று மட்டுமேயானுல் அவள் அதற்காகச் சிறிதும் கவலேப்பட மாட்டாள். இன்னும் எத்தனை எத்தனை கடன்களோ? '... அப்பாவிடம் கெஞ்சிக் கேட்டு, சீதனப்பணம் முழுவதையும் வாங்கியாவது இந்தக் கடன்களைப் கொடுத்து

வீடலாம். ஆனால், அதோடு விஷயம் முடிந்துவிடுமா? ஒரு கடனை தீர்த்தால் புதிதாக இரண்டு கடன்கள் படுகிறாரே!'

இரவில் படுத்துக்கொண்டு இவைகளைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தவளுக்கு, திடீரென்று சுந்தரத்தின் நினைவு வந்தது. 'இவர் தன்னுடைய நண்பரென்று சுந்தரம் சொன்னாரே, அவர் மூலம் இவருடைய சூதுப்பழக்கத்தை நிறுத்த முயற்சிக்கலாமோ? ... நல்ல வேளையாக அப்பாவுக்குத் தெரியாமல் நேற்று அவரிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டேன். என்ன நினைத்திருப்பார்? கோபித்துக் கொண்டு தந்தேனென்று நினைப்பாரோ .... 'இத்தனை நாளும் பத்திரமாக வைத்திருந்தாளே விசரி' என்று நினைப்பாரோ?...... நான் அறிந்திருந்ததை விட அவரைப்பார்த்தால் மிக நல்லவராக இருக்கிறார். ... அப்பாவுக்கே அவரைப் பிடித்துக்கொண்டதே! .. இந்தம் பிடிப்பு 'அப்பவே' ஏற்பட்டிருந்தால்! ... சுந்தரம் என்ன நினைத்திருப்பார்? ரோட்டிலேபோனதும், கடிதத்தைக் கிழித்தெறிந்து விட்டு, எல்லாவற்றையும், என்னையும் மறந்து போனாரோ! அவருக்கு எத்தனைவேலையிருக்கும். நான் தான் விசரி; ஒரு வேலையுமில்லாமல் சும்மா அவரைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறன்... அவருடைய மூகத்தைப்பார்த்த உடனேயே நல்ல மனிதர் என்ற எண்ணம் யாருக்கும் வரும். என்னுடைய கவலைகளைக் கூட அவரிடம் சொல்லி அழுதால் எவ்வளவோ ஆறுதலாயிருக்கும் போலிருக்கிறது. அவரைப்போல எனக்கு ஒரு அண்ணை இருந்தால்! இந்தியாவில் ஏதோ ஒரு பகுதியில், சகோதரனில்லாத பெண்கள் தங்களுக்கு விருப்பமான மான ஒருவரைச் சகோதரனாக ஏற்று அவர் கையிலே நூலைக் கட்டுவார்களாமே, அப்படி இங்கேயும் ஒரு வழக்கமிருந்தால், நான் கட்டாயம் சுந்தரத்தின் கையிலேதான் அந்த நூலைக்கட்டுவேன் ..... பொய்! நானே என்னை ஏமாற்றுகிறேன். நான் அவரை என் அண்ணை மாதிரியா

---

'கலைகலைக்காகவே' என்றகொள்கை உழுத்துப்போன ஒன்றுதான். ஆனாலும் அபூர்வமான சில சந்தர்ப்பங்களில் கலையை அதன் நயத்துக்காக மட்டுமே ரசிக்க வேண்டித்தானிருக்கிறது குமுதத்தில் கண்ணதாசன் ஒவ்வொரு வாரமும் ஒரு தனிப்பாடல் எழுதிவருகிறார். அவருடைய கட்சிக் கொள்கை, எண்ணமெல்லாம் எப்படி எப்படியோ இருக்கிறது. ஆனாலும் எதிர்க்கட்சிக்காரர்கூட அந்தக் கவிதைகளின் நயத்துக்கு ஆட்படாமலிருக்க முடியாது. கவிதைக்கு ஒரு கண்ணதாசன்தான் இப்போது!



நினைக்கிறேன்... பொய்! பொய்!... சே, சே, இதெல்லாம் என்ன நினைப்புகள்!'

கடந்த இரவு நெடுநேரமாக நளினி இந்தமாதிரி ஒரு எண்ணக் கடலிலே, கரை எதுவும் தெரியாமல் மிதந்துகொண்டிருந்தாள். கடைசியில் தன்னை யறியாமலே அயர்ந்துபோனாள்.

இன்று, இந்தக் காலை நேரத்தில் குசினியில் வேலையாயிருந்த போது, இரவு தோன்றிய எண்ணங்களெல்லாம் அவளுக்கு நினைவு வருகின்றன. தனக்குத் தானே சிரித்துக் கொண்டு, 'என்ன விசர்த்தனமான எண்ணங்கள் !' என்று தன் மனத்தையே கேலி செய்கிறாள். மீண்டும் சுந்தரத்தைச் சுற்றி அவள் மனத்தில் எண்ணங்கள் படருகின்றன. ஆனால், இரவிலே தோன்றும் எண்ணங்களுக்குக் கற்பனை அதிகந்தான். அவற்றில்தான் எத்தனை அசாதாரமான கற்பனைகளெல்லாம் வருகின்றன — தமிழ்ச் சினிமாக் கதைகளைப் போலே !

'கிறிங், கிறிங் ! ...கிறிங், கிறிங்...'

தொலைபேசி மணி கதறுகிறது !

நளினி எழுந்து ஓடிப்போய் றீசிவரை எடுத்து, ''மிஸிஸ் வேலாயுதம் ஸ்பீக்கிங்'' என்கிறாள்.

மறுபக்கத்திலிருந்த குரல், ''ஐயா யாழ்ப்பாணம் போவிட்டாரே ?'' என்று கேட்கிறது. 'இது.. இந்தக் குரல்...ஓ, ஓ....' —நளினினியின் உள்ளத்தில் ஏதோ ஒரு மலர் விரிகிறது.

''யார் பேசுகிறது?'' என்று கேட்கிறாள்.

மறுபக்கத்தில் லேசாகச் சிரிக்கும் தொனி கேட்கிறது. ''குரலிலே தெரியேல்லையே உங்களுக்கு ?.....அதுக்குள்ளை மறந்திட்டியளே!.... சுந்தரம் பேசிறன். தெரியேல்லியா, நேற்றைக்கு ஐயாவின் பாஸ்போட் கொண்டு உங்க விட்டை வந்தன்....''

''ஓ, ஓ, ஓ!.....பிளீஸ் மன்னிச்சுக் கொள்ளுங்கோ !....... உங்கடை குரலை நேத்து ஒரு நாள்தானே கேண்டனான். அதோடை டெலிபோனிலை கொஞ்சம் வித்தியாசமில்லியா ,.....நீங்கள் பேசுவியளெண்டு நான் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவுமில்லை.....''-திடீரென ஏற்பட்ட மகிழ்ச்சிப் பதற்றத்தோடு நளினி என்னென்னவோ சொல்கிறாள்.

சுந்தரம் இடைமறித்து "உங்களை நான் குழப்பிப்போட்டன் போலை....'' என்கிறான்.

''ஐயையோ, நீங்கள் என்ன அப்படி நினைக்கிறியள். நான் 'எதிர்பார்க்கேல்லை' எண்டத்துக்கு நீங்கள் வேறை மீனிங் எடுக்கிறியள்..என்ன கேட்டனீங்கள்? 'அவர்' இண்டைக்கு வரயில்லை...''

"பாத்தியளா, நான் என்னவோ கேட்கிறன், நீங்கள் என்னவோ சொல்லுறியள். 'அவர்' வந்திருக்காரெண்டு எனக்குத் தெரியும். ஐயா யாழ்ப்பாணம் போயிட்டாரோ என்றெல்லோ கேட்டனான்''.

நளினி வெட்கி உதட்டைக் கடித்துக்கொள்கிறாள்.

"அப்பா நேத்து இராத்திரியே வெளிக்கிட்டுவிட்டார்..."

"இண்டைக்கு விசா எடுக்க வேணுமென்று சொன்னாரே?"

"அதுக்கு சண்முகம் மாமா விட்டைச் சொல்லிப்போட்டுப் போறார். அவர் எடுத்து அனுப்பிறனெண்டவர்..."

என்னவோ நிறையக் கேட்க வேணும் பேசவேணும்போல நளினிக்கு மனதுக்குள் துருதுருக்கிறது. ஆனால் என்ன, ஏது என்று ஒன்றும் பேச வரமாட்டேனென்கிறது. சுந்தரம் டக்கென்று கதையை முடித்து டெலிபோனை வைத்துவிடுவானோ என்ற பயம் அவளுக்கு. 'அதற்கிடையில் ஏதாவது....ஏதாவது சொல்லவேண்டுமே!'

"நேத்து அப்பாவுக்குக் கொஞ்சம் கவலையாய்ப் போச்சு அதுதான்...."

"என்ன விஷயம்?"

"உங்களிட்டைச் சொன்னாத்தான் என்னுடைய கவலையும் தீரும்போலையிருக்கு. ....பின்னேரம் ஒஃப்பீஸ் விட்டாப்போலை உங்களுக்கு ஏதும் வேலையிருக்கே?... ..உங்களுக்கு வசதியெண்டால் பின்னேரம் இந்தப் பக்கம் ஒருக்கா வாருங்கோ...."

சுந்தரத்தின் குரலிலும் ஒரு கனிவு தெரிகிறது: "ஓ, கட்டாயம் வாறன். உண்மையாய்ச் சொல்லிறன், அப்பா இல்லாட்டி நானே உங்க வீட்டுக்கு வரலாமோ எண்டு கேட்கத்தான் போன் எடுத்தனான். வேலாயு



அமெரிக்க பத்திரிகையான 'நியூயோக் டைம்ஸ்' தமிழ் நாடு அரசையும் கருணாநிதியையும் மிகவும் பாராட்டி ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. இந்தியா முழுவதிலும் காங்கிரஸ் ஆட்சிக்கு வெளியே உள்ள ஒரே ஒரு மாநிலம் இப்போது தமிழ் நாடு ஒன்றுதான்!

தத்தைப்பற்றி உங்களிட்டைக் கொஞ்சம் பேசவேணும்!"

தானே வரவிருந்ததாக சுந்தரம் சொன்னதும் நளினிக்கு உடலெல்லாம் புல்லரிக்கிறது.

"அஞ்சுமணிக்கெல்லாம் வந்திடுவியளெல்லே? .. தாங்ஸ்" என்று சொல்லி றிசீவரை வைத்துவிட்டு, ஏதோ கனவு காண்கிறவள் போல அப்படியே சிறிது நேரம் நிற்கிறாள். சுந்தரம் வரப்போகிறானென்ற மகிழ்ச்சி ஒரு புறமும் ஏதோ செய்யக் கூடாததைச் செய்து விட்டோமோ என்ற கலக்கம் ஒரு புறமுமாக அவளை உலுப்புகின்றன.

"அவரை நான் வரச் சொல்லிக் கேட்டது பிழையாயிருக்குமோ? ... தானும் வரவிருந்ததாகத்தானே அவரும் சொன்

ஞர்? அவர் வந்தால் அந்தக் கடிதத்தைப் பற்றி ஏதும் கதைப்பாரோ? . . . கதைக்க அதிலே என்ன இருக்கிறது? ஒருவேளை . . அவருக்கும் என்னைப் போல . . . என்னைப்பற்றிய எண்ணங்கள் இருக்குமோ? என்னை . . . என்னை விரும்புகிருரா . . . சே, என்ன பேய்த்தனமான யோசனை! அவரைப் பாத்தால் 'கண்ணியமானவர்' என்று முகத்திலே எழுதி ஒட்டிவிட்டதுமாதிரி இருக்கிறது. எண்ணவாயிருந்தாலும் அவரிடம் என்னுடைய கவலைகளைச் சொல்லியழுதால் ஒரு பாரம் குறைந்தது மாதிரியிருக்கும் . . ஒரு நாள் மட்டுந்தானே அவருடன் கதைத்திருக்கிறேன். அதற்குள் குடும்பத்துக்குள் இருக்கிறகுறை நிறைகளையெல்லாம் எப்படிக் கதைக்கிறது? .,.அப்பாவும் போய்விட்டார். 'இவ'ரும் இல்லை. அவர் வந்தால் நான் தனியாக இருந்து பதற்றப்படாமல் கதைப்பேனு...?'

தொலைபேசி அழைப்பு வந்த நேரம் தொடக்கம் நளினி இந்த உலகத்தில் இல்லை. ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமல் அவள் வேலை செய்வதையும், தடுமாறுவதையும் பார்த்து மணியன் ஆச்சரியப்படுகிருன். அவளுக்கென்று அவன் எடுத்து வைத்த கோப்பியை அரைமணி நேரத்துக்கு மேலாக - இன்னும் அவள் குடிக்காமல் விட்டிருப்பதைக் கண்டதும் அவனுடைய ஆச்சரியம் பலமடங்காகிறது.

"இதென்னம்மா, நீங்க கோப்பியை எடுக்கேல்லை. அது ஆறிச் சிலுவட்டையடிச்சுப்போச்சு!. . . நான் வேறை கோப்பி எடுக்கட்டே அம்மா?''

''அட! . . . நீ ஏனடா பேசாமல் வைச்சனி? நானும் கவனிக்கேல்லை''

"நான் கொண்டுவந்து தர நீங்கதானம்மா இதிலை வைக்கச் சொன்னியள்!''

நளினி சிரித்துக்கொண்டே "அப்பிடியே?... எனக்கு என்னவோ யோசனையள்...சரி சரி,எனக்கு இனிக் கோப்பி வேண்டாம். இன்னும் கொஞ்ச நேரத்தாலை சாப்பிடுறதுதானே? நீ வேலையைப் பார்!'' என்றவள், 'இனி இவைகளைப்பற்றி ஒன்றும் நினைக்கக்கூடாது. அவர் பின்னேரம் வரட்டும்; அப்போது இருக்கிற மாதிரிப் பார்த்துக்கொள்ளலாம்' என்று தீர்மானம் எடுத்தவளாக கைவேலையில் கவனம் செலுத்த முனைகிருள். ஆனல் வேதாளம் பழையபடி முருக்க மரத்துக்கே ஓடிக்கொண்டிருக்கிறது.

மாலை. ஐந்து மணிக்கு இன்னும் ஐந்து நிமிஷங்கள் இருக்கின்றன.

சுந்தரம் வந்து கதவில் லேசாகச் சுண்டுவது கேட்கிறது.

நளினி ஓடிப்போய்க் கதவைத் திறந்துவிட்டு, ''வாருங்கோ...இருங்கோ'' என்று உபசரிக்கிருள். பிறகு, தன்னுடைய பரபரப்பை அவன் கண்டுகொள்வானே என்று அஞ்சியவளாய் ''கொஞ்சம் இருங்கோ வந்திட்டன்'' என்று சொல்லிவிட்டுக் குசினிப்பக்கம் போகிருள். அங்கே கைகால் ஓடாமல் அதை எடுப்பதும் இதை வைப்பதுமாக இரண்டு நிமிஷங்களைக் கழித்த

வள் பிறகு நினைவு வந்தவளாய் மணியனிடம் பாலைச்சுட வைத்து தேனீர் போடும்படிசொல்கிறாள்.

தானும் சுந்தரமும் தனியாக இருந்து கதைக்கப் போவதை நினைத்ததும், அவளுக்கு உடம்பெல்லாம் பலவீனம் உறுவது போலத்தெரிகிறது. 'என்ன ஏதோ' என்று தெரியாத ஒரு பயம்.

பெண்களுக்கு இயல்பாகவே உள்ள சமயோசித புத்தி நளினிக்குச் சற்று அதிகமென்றே சொல்லலாம். ''மணியா, அங்கை ஒரு ஐயா வந்திருக்கிறார். எனக்கும் சேர்த்து இரண்டு டீ போட்டுக் கொண்டுவா...''என்றவள் தொடர்ந்து, முன் ஹோலிலே கிடக்கிற 'ஷோ கேஸ்' எவ்வளவு தூசும் துப்பட்டியுமாகக் கிடக்கு, டீயைக் கொண்டுவந்து தந்து விட்டு, ஈரத்துணி எடுத்துக்கொண்டந்து அதை வடிவாய்த் துடை!'' என்கிறாள். மணியன் தங்களோடு ஹோலுக்குள் இருப்பது ஒரு பாதுகாப்பாக இருக்குமென்ற நினைப்பு அவளுக்கு. 'ஆனால், இவனை வைத்துக் கொண்டு 'ஏதாவது' கதைக்கிறதென்றால்...' என்ற சந்தேகம் வருகிறது. உடனேயே 'இங்கிலீசில் கதைக்கலாம்' என்று பதிலும் சொல்லிக்' கொள்கிறாள்.

நளினி திரும்பவும் ஹோலுக்குள் போய் சுந்தரத்தின் எதிரில் உட்கார்ந்ததும், ''வேலாயுதம் எப்ப வாறாராம்? காயிதம் வரயில்லையா? என்று சுந்தரம் கேட்கிறான்.

''நாளைக்கு, அதுதவறினால் அடுத்த நாளைக்கு வந்துவிடுவார்...''

தான் என்ன கதைக்கலாம், எப்படித் தொடங்கலாம் என்று. நளினி யோசித்துக் கொர்ண்டிருக்கிறாள். ஆனால் சுந்தரம் டக்கென்று விஷயத்துக்கு வந்துவிடுகி கிறான்! ''அவருடைய விஷயந்தான் உங்களோடை கதைக்க வெண்டு வந்தனான்...அவர் இப்படியே போய்க்கொண்டிருந்தால் இதனுடைய முடிவென்ன?.... என்று நிறுத்துகிறான்.

'சுந்தரம் தான் கொடுத்த கடிதத்தைப்பற்றி ஏதும் கதைக்க வரவில்லை. அவனுடைய நண்பரின் - தன் கணவரின்- வாழ்க்கைச் சீர்கேட்டைப் பற்றிப் பேசுவதற்காகவே வந்திருக்கிறான்' என்று தெளிவானதும், நளினிக்கு ஏதோ பெரிய ஆறுதலாக இருக்கிறது. கூடவே ஒரு ஏமாற்ற உணர்ச்சியும் அடிமனத்தில் மெல்ல ஊருவதுபோலத் தோன்றுகிறது.

''அவருடைய - விஷயங்கள் நான் நினைக்கிறன், உங்களுக்குத் தெரிஞ்சளவு எனக்குத் தெரிஞ்சிருக்காது...நான் என்ன செய்கிறது?...என்ன செய்ய முடியும்?''



■ டைரக்டர் கோபாலகிருஷ்ணன் தமது 'கற்பகம்' படத்தில் புது முகம் ஒன்றைப் போடுவதற்காகத் தேர்வு நடத்தினார். அதற்கு கே. ஆர். விஜயாவும் போனார். அந்தக் காலத்தில் விஜயா மிக ஒல்லியாக இருப்பார், ஒல்லியாக இருப்பதனால் தன்னைத்தெரிவு செய்யமாட்டார்களோ என்று அப்போது பயந்தாராம் விஜயா. இப்போது பருத்துவிட்டதனால் அநேக சந்தர்ப்பங்கள் அவருக்குக் கிடைக்காமல் போய்விட்டன!

நளினியின் குரலில் லேசான கர கரப்பைக் காண்கிறான் சுந்த ரம்.

"நான் இரண்டு மூன்று முறை சாடையாய்ச் சொல்லிப் போட்டன். அவர் கேட்கிறமா திரியில்லை... நான் நினைக்கிறன். அவர் வாங்கிற சம்பளம் இந்த அரு வட்டியள் குடுக்கவே பத்தா மலிருக்கும்... இப்ப ஏன் யாழ்ப் பாணம் போயிருக்கிறாரெண்டு தெரியுமே..."

"ஏதோ காசு விஷயமெண்டு தெரியும். விபரமா அவர் ஒண் டும் சொல்லயில்லை."

"எனக்குத் தெரியும். ஒரு ஆளுக்கு இவர் இரண்டாயிரம் ரூபாவரையிலை குடுக்கவேணும். ஒரு வருசத்துக்கு முன்னம் ஆருக் கோ - ஆரோ பட்டாணியனுக் கெண்டு நினைக்கிறன் - ஆயிரம் ரூபா குடுக்கமுடியாமல் இவர் அந்தரப்பட, எனக்குத் தெரிஞ்ச ஒரு பெரிய மனுஷன் இவர் படு கிற அந்தரத்தைப் பார்த்து விட்டு, தனக்குத் தெரிஞ்ச பகுதி யிலை ஆயிரம் ரூபா. தான் பிணை நிண்டு வாங்கிக் கொடுத்தவர். அது கொஞ்சம் குறைந்த வட்டி. ஆயிரத்துக்கு மாசம் ஐம்பது ரூபா வெண்டு நினைக்கிறன். இந்த வட்டியும் முதலுமாக இரண்டாயிரத்துக்குக் கிட்ட வந் துட்டுதாம். பிணை நிண்டவர் ஒரு நாள் இவரைப் பிடிச்சு நல் லாய்ப் பேசிப்போட்டார். —உங் களிட்டையும் புரட்டக்கூடிய மட் டும் புரட்டிப்போட்டார் போலை. அது தான் இப்ப தாய்வீட்டை போயிருக்கிறார்.., நான் நினைக் கேல்லை, அங்கையும் இவருடைய காரியம் சரிவருமெண்டு..."

மணியன் ஒரு தட்டில் இர ண்டு கிளாஸ் டீ கொண்டு வரு கிறான். நளினி எழுந்து அவனி டம் அதைவாங்கி ஒன்றைச் சுந் தரத்திடம் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை எடுத்துக்கொள் கிறாள்.

இவ்வளவு நேரமும் கதைத் ததில் பழைய பரபரப்பும் அச்ச மும் நீங்கியவளாக, நளினி மணி யனிடம் மெதுவாகச் சொல்கி றாள்: "ஷோகேஸைப் பிறகு துடைக்கலாம். இப்ப நீ அங்கை போய் வேலையைப் பார்!"

மணியன் போனதும், மறு படியும் பழைய சூழ்நிலை ஏற்படு கிறது.

சுந்தரம் சொல்கிறான்: "அவர் முந்திய ஆளாயிருந்தா லும் பரவாயில்லை... இனிமேல் அவருக்கு வரும் நட்டம் இன்னு மொரு ஆளையுமெல்லே பாதிக்கப் போகுது... அவரைக் காணுகிற நேரமெல்லாம் எனக்கு உங்களு டைய ஞாபகந்தான் வாறது.." —சுந்தரத்தின் குரலில் ஒரு கனிவு குழைகிறது.


தன்னிடம் அனுதாபப்படும் சுந்தரத்தின் வார்த்தைகளைக் கேட்டதும், நளினியின் உள்ளம் பொங்கிப் பொருமி, நெஞ்சு வெடித்து விடுவது போன்ற ஒரு உணர்ச்சி எழுகிறது. அதைத் தாங்கமாட்டாதவளாய் அவள் வாயைத்திறக்க, விம்ம லும் அழுகையுமாக வெளிவரு கிறது.

சுந்தரம் பதறிப்போகிறான். ஓடிப்போய் அவளுடைய கண் ணீரைத் துடைத்து ஆதரவு செய்ய வேண்டும் போல ஒரு ஒரு உணர்ச்சி அவனுள் எழுகி றது.

— தொடரும்

அச்சிடும் கடதாசியின் விலை சமீபத்தில் மீண்டும் அதிகரித்திருக்கிறது. இலங்கையில் கடதாசி உற்பத்தி, இறக்குமதி ஆகியவற்றில் ஏகபோக உரிமையாளரான கிழக்கிலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனம் இந்த மாதம் அச்சிடும் நியூஸ்பிறின்ட் கடதாசி விலையை சுமார் 30 சதவீதம் அதிகரித்திருக்கிறது. மற்றும் கடதாசிகளுக்கும் விலை அதிகரிப்பட்டிருக்கிறது. பிரசுரத் தொழிலில் ஈடுபட்டிருப்போரை இது மிகக் கடுமையாகப் பாதிப்பது போலத் தோன்றினாலும், இந்த விலை யேற்றத்தின் சுமையெல்லாம் பொதுமக்களின் தலையில்தான் வந்து விழுகின்றது.

கி. பி. 2000ம் ஆண்டில், அதாவது இன்னும் 28வருடங்களில் உலக சனத்தொகை700 கோடியாகி விடுமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். எதிர்வரும் 28 வருடங்களுக்குள் உலக உணவு உற்பத்தி மூன்று மடங்காவது அதிகரித்தால் மட்டுமே, மக்கள் பட்டினிச்சாவால் அழிவதைத் தடுக்க முடியுமென்று கூறுகிறார்கள். வில்லியம் யோல். படொக் என்பவர்கள் 'உணவுப்பஞ்சம் 1975' என்று ஒரு நூலை எழுதியிருக்கிறார்கள். 1975ம் ஆண்டளவில் கொடிய உணவுப் பஞ்சம் ஏற்படுமென்றும், அதனால் பல மக்கள் இறந்து மடிவார்களென்றும் எழுதியிருக்கிறார்கள். உணவு உற்பத்தியில் உடனடியாகக்கவனம் செலுத்தாத நாடுகள் இந்தப் பஞ்சத்தின் கொடுமையை அனுபவிக்க வேண்டியே வரும்!



யாழ்ப்பாணத்தில் வியாபாரத்துறை வாசகங்களை அவதானிப்பவர்கள் 'தரன்' என்ற பெயரைத் தெரியாமலிருக்கமுடியாது. ஓவியர் 'தரன்' ஓவியத்தை நல்ல தொழிலாக அமைத்து வெற்றிகண்டிருக்கிறார். வெறும் திறமை மட்டுமல்ல; கடுமையான உழைப்புமே இவரை முன்னுக்கு கொண்டு வந்திருக்கின்றது. ஈழத்துப் பத்திரிகைகளிடம் அபிமானம் உள்ள இவருடைய ஓவியங்கள்'வெள்ளி' மேலட்டையையும் அடிக்கடி அலங்கரிப்பதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள்.

வானவெளியில் முதலில் ஏழு கிரகங்களே கண்டு பிடிக்கப்பட்டன. பின்னர் நெப்டியூன், யூரான்ஸ் என்ற இரண்டு புதிய கிரகங்களைக் கண்டுபிடித்தார்கள். இப்போது 'கிரஹாம் கொன்ரொய்' என்ற மாணவன் இன்னொரு புதிய கிரகத்தையும் கண்டுபிடித்திருக்கிறான். அமெரிக்க விஞ்ஞானிகளும் இப்போது இதை ஏற்றுக்கொண்டு விட்டனர். தான் கண்டுபிடித்த புதிய கிரகத்துக்கு 'பொஸிடன்' என்று பெயர் வைத்திருக்கிறான் கொன்ரோய். இந்த மாணவனுக்கு 14 வயது தான் ஆகிறது.



■ பெண்கள் தமது உண்மையான வயதைச் சொல்ல மாட்டார்களென்பார்கள். அதிலும் சினிமா நடிகைகள் 'என்றும் பதினாறு' வயது என்று சொல்வார்களென்று கேலிசெய்வது வழக்கம். ஓரளவுக்கு இது உண்மையுந்தான். ஆனால் ஜெயலலிதா தனக்கு 25 வயதாகி விட்டதென்று பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார். 'ஐம்பத்தேழுவயதாகிய எம். ஜி. ஆரின் மார்க்கெட் இறங்கவில்லையே; எனக்கு இது ஒரு வயதா!' என்று ஜெயலலிதா எண்ணியிருக்கலாம். ஆனல் எல்லாரும் எம். ஜி. ஆராகி விடமுடியுமா?

■ 'பிச்சை என்று கேட்பவனுக்கு இயன்றதைக் கொடுக்காமல்விடுவது பாவம். ஆனல் பாத்திரமறியாமல் பிச்சையிடுவது அதனிலும் பாவம்! பிச்சை எடுப்பதை ஒரு தொழிலாகவே பலர் கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ சிறு தொழில்களை விட, இதை அதிக லாபமுள்ள தொழிலாகப் பலர் செய்கிறார்கள்! — பல பிச்சைக்காரர்களைத் திரட்டி வைத்து பிச்சைத் தொழிலை கம்பனி ரீதியில் நடாத்தும் பிச்சை முதலாளிகளும் பெரிய நகரங்களில் இருக்கிறார்கள்!

■ இலங்கை முழுவதிலுமுள்ள நீதித்தலங்களில் சாட்சிகள் சொல்லும் அதே மொழியிலேயே பதிவுகளும் வைக்கப்படும் என்று அமைச்சர் பீலிக்ஸ் ஒரு மகாநாட்டில் அறிவித்திருக்கிறார். இது மிகவும் சிறந்த ஒரு வழி. தமிழர் கூட்டணி வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் தமிழில் பதிவு கேட்டார்கள். அமைச்சர் அறிவித்திருக்கும் திட்டம் நடைமுறைககு வந்தால், கூட்டணியினர் கேட்டதை விட மேலான உரிமை தமிழுக்கு வந்து விடும்!

■ 'பயனியர் 10' என்பதுஅமெரிக்க விண்வெளிக்கலம். இதுவரை விண்வெளிக்கு அனுப்பப்பட்ட கலங்களுள் இதுவே மிகவும் சக்தி வாய்ந்தது. இதற்குமுன் சந்திரமண்டலத்துக்குப் போக 3 நாள்கள் சென்றன. ஆனல் 2-3-72ல் புறப்பட்ட பயனியர்10, ஒன்பது மணி நேரத்தில் சந்திர மண்டலத்தைக் கடந்து சென்று விட்டது. அத்தனை வேகம்! 23நாட்களில் செவ்வாய் மண்டலத்தையும் கடந்து சென்றுகொண்டிருக்கும் இந்த விண்வெளிக்கலம் 19 மாதங்கள் பயணம் செய்து, அதாவது 1973 டிசம்பரில் வியாழக்கிரகத்தின் பக்கம் போய்ச் சேருமென்றுதிட்டமிட்டிருக்கிறார்கள். 9 மணித்தியாலயத்தில் சந்திர மண்டலம் போகின்ற கலம், வியாழனைச் சேர 19, மாதங்கள்! அடேயப்பா, வியாழன் எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்று நினைத்துப்பாருங்கள்!

# நீங்களும் பேச்சாளராகலாம்!

## பேச்சுக் கலை ஏன் அவசியம்?

பேச்சுக் கலை!

பெரிய கலை; அரிய கலை, கற்ருரையும் கல்லாதவரையும் கவர வல்ல கலை!

வலிமையும், தீவிரமும், இனிமையும் கொண்ட பேச்சும் உரையாடலுந்தான், நம்முடைய தொழிலின் முன்னேற்றத்திற்கும், பொதுவாழ்வின் முன்னேற்றத்திற்கும் திறவுகோல்,

நம்மையும் நம்முடைய ஆற்றலையும் பிறருக்கு அறிமுகப்படுத்திக்கொள்ள, நமக்கிருக்கும் முக்கியமான சாதனம் பேச்சுக் கலைதான்!

நம்முடைய குடும்பத்தாரையும், சில முக்கியமான நெருங்கிய நண்பர்களையும் தவிர்த்து, ஊரும் உலகமும் நம்மைப்பற்றி அறிந்துகொள்வதெல்லாம், என்ன சொல்கிருேம், அதையும் எப்படிச் சொல்கிருேம் என்பதைக்கொண்டுதான்.

ஒரு பொதுநலவாதியின் வளர்ச்சி அவன் பேச்சுவன்மையில்தான் தங்கியுள்ளதென்பது மறுக்கமுடியாததொன்று!

ஒரு அரசியல்வாதியின் உயர்ச்சி அவன் நாவன்மையில் —பேச்சுக்கலையில்தான் நிச்சயமாகத் தங்கியுள்ளது!

ஒவ்வொரு கட்சிக்கும் தலைசிறந்த பேச்சாளர்கள் வேண்டும். தலைசிறந்த பேச்சாளர்கள் இல்லாவிட்டால் அக்கட்சி முன்னேற முடியாது; மக்கள் செல்வாக்கைப் பெற முடியாது.

## பேச்சுக் கலையின் இன்றியமையாமை!

நீங்கள் புகழின் உச்சிக்குச் செல்லவேண்டுமா?

தலைவர்களாக மிளிரவேண்டுமா?

பெருஞ் செல்வந்தர்களாக மாறவேண்டுமா?

எல்லாவற்றிற்குமே இன்று பேச்சுக்கலை தவிர்க்க முடியாததொன்ருகிவிட்டது.

நடைமுறையில் நோக்கும்போது இன்று தலை சிறந்த பேச்சாளர்களே, தலைவர்களாக விருப்பதைக் காண்கின்ருேம். இத்தலைவர்களே நம்மை ஆட்சியும் செய்கின்ருர்கள்.

நாம் விரும்பினுல் என்ன, விரும்பாவிட்டால் என்ன, பெரும்பாலும் நாநலமே—பேச்சுக்கலையே ஆட்சிக்கும், அதிகாரத்துக்கும் அடிப்படையான கருவியாக அமைந்துவிட்டது.

எந்தத்துறையில் தொண்டு செய்ய விருப்பமுள்ளவர்களும், பேச்சுக்கலையில் பயிற்சி பெற வேண்டிய இன்றியமையாமை இன்று ஏற்பட்டுள்ளது.

இன்றைய எமது சமுதாய வாழ்வில் தொழிலாளர்கள்

''நீங்களும் பேச்சாளராகலாம்'' — ந. சந்திரமோகன்.
அன்பு வெளியீடு, யாழ்ப்பாணம். ரூபா 2-00

தொடக்கம் தொழில் அதிபர்கள் வரையும், மாணவர்கள் முதல் ஆசிரியர்கள் வரையும், எழுத்தாளர் தொடக்கம் அறிஞர் பெருமக்கள் வரையும், கிராமசபை உறுப்பினர்கள் முதல் அமைச்சர்கள் வரையும், பொருள் விற்பனையாளன் தொடக்கம் மாபெரும் செல்வர்கள் வரையும் பேச்வேண்டிய இன்றியமையாமையுடையவர்களாகின்றனர்கள்.

சிறந்த பேச்சாளர்களே நமது கருத்தை உருவாக்குகின்றனர்கள். அதிகாரத்தையும் கைப்பற்றுகின்றனர்கள்.

சுருங்கக் கூறினல் பேச்சு வாழ்வில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுவிட்டது.

## பேச்சுக்கலையை யார்தான் புறக்கணிக்க முடியும் ?

இப்பேர்ப்பட்ட இன்றியமையாத கலையை யார்தான் விரும்பமாட்டார்கள் !

புகழ்பெற விரும்பாதவர்களும் உண்டோ !

தலைவர்களாவதற்கு யாருக்குத்தான் விருப்பமில்லை !


அதிகார பீடம் ஏற எவர்தான் முன்வரார் !

ஆட்சியைக் கைப்பற்ற விரும்பாதாரும் உண்டோ !

'செல்வம்' வேண்டாமென்று உதறுபவர்கள் யாவர் !

தேர்தலில், தோல்வியை அணைக்க யார்தான் விரும்புவார்கள் ?

இவைகளின் வெற்றிக்கு - முன்னேற்றத்திற்கு அடிப்



ந. சந்திரமோகன்.

இவரே தாம் எழுதிய நூலின் சுருக்கத்தை 'வெள்ளி' வாசகர்களுக்காகத் தயாரித்து தந்திருக்கிறார்.

படைக் கருவியாகவிருக்கும் பேச்சுக்கலையை அடைவதற்கு யார்தான் விரும்பமாட்டார்கள் ?

''இவ்வரிய கலையை நாமும் அடைய முடியாதா ?''—என்று அங்கலாய்ப்பவர்கள் எத்தனை பேர் ?

''எல்லாவற்றிற்குமே அடிப்படைக் கருவியாகவிருக்கும் இப்பெரிய கலை எம்மிடம் வந்து சேராதா ? — என்று ஏங்கித் தவிக்கும் இளவல்கள்தான் எத்தனை ?

'முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்', 'முயற்சி திருவினையாக்கும்' — எனும் வாக்கியங்களை உணர்ந்தவர்கள் - அதன்படி செயற்படுபவர்கள், நிச்சயமாக எதிலுமே தோல்வியடையமாட்டார்கள்.

பேச்சுக்கலையை அடைவதற்கு முதற்கண் வேண்டுவது கடின உழைப்பு.

உழைப்பினுல், முயற்சியினுல், பயிற்சியினுல் நிச்சயமாகச் சிறந்த பேச்சாளராகத் திகழமுடியும். அனைவரையும் கவரவல்ல சிறந்தபேச்சாளராகத்திகழ முடியும். சுவைசொட்ட, நயம்கொழிக்க, தெளிவு நிறைந்த உணர்ச்சி பொங்க, எழில் நடையுடன் பேசமுடியும்.

நாவலராகவும் மிளிரலாம்!

## நாமும் பேச்சாளராக முடியுமா?

இவ்வளவு சிறந்த பேச்சுக் கலையை அடைவதற்கு யாருக்குத்தான் விருப்பமிருக்காது!

ஆனுல்......

மேடையேறவேண்டும் என்று நினைத்தவுடனேயே நடுங்குகின்றதே!

ஏதோ ஒருவகையாக மிகுந்த சிரமப்பட்டு மேடையேறிவிட்டாலோ...அப்பப்பா...

கை, கால்கள் பதறுகின்றன!

உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டுகின்றது! நாக்கு மேல் அண்ணத்தில் ஒட்டிக்கொள்கின்றது.

ஒரு வார்த்தைதானும் வெளிவரமாட்டேனென்கின்றது!

மேடையில் நின்று சபையைப் பார்த்தால், பல நூற்றுக் கணக்கான கூரிய கண்கள் வெறித்துப் பார்க்கின்றனவே!

உள்ளந் தடுமாற கூறவேண்டிய கருத்துக்களைவிட்டு வேண்டாதனவற்றையெல்லாம் வாய் உளறி விடுகின்றதே!

பேசுவதற்கென்று மேடையேறியவர்கள் பேசமுடியாமல் உடம்பு வெயர்த்துக் கொட்ட, உள்ளந்தடுமாற, நாத்தளதளக்க, கைகால்கள் நடுங்க மேடையைவிட்டு இறங்கியோடியவர்கள் எத்தனைபேர்?

இன்று சிறந்த பேச்சாளர்களாக—நாவலர்களாகத் திகழ்கின்றவர்கள் கூட், ஆரம்ப காலத்தில் இதே நிலைமைகளை நிச்சயமாக அனுபவித்துத்தான் இருப்பார்கள்.

பேசுவது மனிதனது இயற்கையான சுபாவம். நண்பர்களுக்கு மத்தியில் விவாதிக்கும் பொழுது எமக்கிருந்த நிதானம், தெளிவு, வலிமை, இயற்கையான சுபாவம் ஆகிய இயல்கள் எல்லாம் மேடையேறியதும், எங்கே ஓடி ஒழிந்து கொள்கின்றன?

இவைகளையெல்லாம் விரட்டியடித்து, நாமும் பேச்சாளராக முடியாதா?

நிச்சயமாக முடியும்!

தன்னம்பிக்கையும், மனத்தில் உறுதியும், விடாமுயற்சியும் ஒருவருக்கு இருக்குமாஞல் நிச்சயமாகப் பேச்சாளராக முடியும்!

மேலும் பயிற்சியாலும், பழக்கத்தாலும் சிறந்த பேச்சாளராவதற்கு இடமுண்டு.

## அச்சத்தை விரட்டியடிப்பது எப்படி?

மனத்தில் நிறைந்த உறுதியும், தன்னம்பிக்கையும் நிறைந்திருக்குமாஞல் அச்சத்தை விரட்டியடிக்க முடியும்.



பண்டிதர் கா. பொ. இரத்தினம் 'அடிமைச்சாசனம்' என்ற சிறுநூலை எழுதி வெளியிட்டார். அது வெளியான சுமார் ஒரு மாத காலத்திலேயே முதல் பதிப்பு முழுவதும் விற்றுவிட்டது. அந்த நூலை இன்னும் சற்று விரிவாக்கி இரண்டாவது பதிப்பையும் வெளியிடப் போகிறார்அவர். இதைத்தவிர, அவருடைய 'மனப்பால்' என்ற நூலும் இம்மாதம் வெளிவரப் போகிறது. தொடர்ந்து 'முதலும் முடிவும்', 'வெல்லுவோம்', 'ஈழத்தமிழர் போராட்டம்' முதலிய நூல்களையும் பண்டிதர் வெளியிட இருக்கிறார். தமிழ் நாட்டில் தி. மு. க. தலைவர்கள் மேடைப்பேச்சை விட, தங்கள் எழுத்துத் திறனும் மக்களின் மனத்தைப் பெரிதும் கவர்ந்தார்கள். அந்த வழியில் இறங்கியிருக்கும் பண்டிதரின் செல்வாக்கும் மிக உயரப்போகிறது!

---

மனவுறுதி வலிமையாக முறுக்கு ஏறி நின்றால், தலை நிமிர்ந்து நின்றால், பயம் மங்கி மறைந்து இருந்த இடம் கூடத் தெரியாமல் ஓடி ஒழிந்துவிடும்.

தன்னம்பிக்கை வளர்ந்து ஓங்க, ஓங்க, புதிய ஒளி நெஞ்செல்லாம் நிறைந்து எமது திறமையில் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்படும். அச்சம் செத்து மடிந்து போகும்!

நம்முடைய திறமையில் நமக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கவேண்டும். கூட்டத்துக்கு வந்திருப்பவர்கள் என்னைவிட அறிவிற் குறைந்தவர்கள்தான் எனத் தற்காலிகமாகவென்றாலென்ன, மனத்தைத் திடப்படுத்திக்கொண்டால் தாழ்வு மனப்பான்மை நம்மை நெருங்காது.

"எமது மனத்தில் உதித்தவைகளை, நண்பர்களுக்கு எடுத்துக் கூறுவதுபோல் கூட்டத்தில் கூறுகின்றோம்; ஏற்றுக்கொள்ளுவோர், கொள்ளட்டும்; உதறித் தள்ளுவோர், தள்ளட்டும்; தூற்றுவோர் தூற்றட்டும்; பாராட்டுவோர், மலர் மாலை சூட்டட்டும்!" — என்ற நிலையில் நாம் செயற்படுவோமேயானால், பேச்சுக்கலை நிச்சயமாக வளர்ந்து பலன் தரும்.

அவையச்சம் யாருக்குத்தான் இருக்காது?

கூட்டங்களில் சிலர் பேசுவதற்கு ஒப்புக்கொண்டு, பேசுவதற்கு அஞ்சி, அலறி, நடுங்கிப் பேசவேண்டிய நாளன்று ஊரை விட்டு ஓடிப்போனவர்கள் எத்தனை பேர்?

இவற்றைப் பயிற்சியின் காரணமாகவும், எமது ஒளிமயமான எதிர்காலத்தை நெஞ்சில் நிறைத்து, மனத்தைத் திடப்படுத்திக் கொள்வதன் மூலமும், தன்னம்பிக்கையை ஓங்க, ஓங்க வளர்த்துக் கொள்வதன் மூலமும், ஒழித்துக் கட்டிவிட முடியும்.

## ஆரம்பப் பேச்சாளர்களுக் குரிய பயிற்சிகள்.

'அறையில் ஆடி அம்பலத்தில் ஆடு' என்னும் முதுமொழிக்கேற்ப ஆரம்பப் பேச்சாளர்கள் செயற்படவேண்டும்.

மேடையேறுவதற்கு முன்பு —கூட்டங்களில் பேசுவதற்கு முன்பு தொடக்கப்பேச்சாளர்கள் தங்கள் பேச்சுப் பயிற்சியை அறையிலேயே வைத்துக்கொள்ள வேண்டும்.

அறிஞர்களின் சொற்பொழிவுகளையோ, அன்றி செய்திப் பத்திரிகைகளையோ உரக்கப் படிக்கவேண்டும்.

நிலைக்கண்ணாடிக்கு முன்னால் நின்றுகொண்டு— மேடையில் பேசுவது போலவே கற்பனை செய்துகொண்டு—ஏதாவது ஒரு பொருளை விரித்துப் பேசவேண்டும்.

மிகத் தேவையான இடங்களில் மட்டுமே அங்க அசைவுகளைக் காட்டவேண்டும். தேவையற்ற முறையில் அங்கங்களை அசைப்பது, பேச்சாளர்களுக்குக் கேவலத்தையே கொடுக்கும்.

நெடுந்தூரம் தனிமையாக நடந்து செல்லும்போதோ அன்றித் துவிச்சக்கர வண்டியில் செல்லும்போதோ, எமது மனத்திரையிலே பெருங்கூட்டம் நடத்தலாம்.

பேச்சாளர்கள் கூட்டத்திற்குச் செல்லும் பொழுது, பேசப்போகுப் பொருளில் நிறைந்த தெளிவும்—விரிவான விளக்க அறிவும் உடையவராகவிருக்க வேண்டும். இந்நிலையில் மேடையேறும்போது அச்சம் — கிலி நெருங்கமாட்டாது.

பேசப்போகும் பொருளில் விளக்கமின்மையும், தெளிவற்ற நிலையும் இருந்தால், அச்சம் பேச்சாளியைத் தோற்கடித்துவிடும்.

மேடையேறப் போகின்றவர் தனது ஆடைகளிலும் கவனம் செலுத்தவேண்டும். 'ஆள் பாதி ஆடைபாதி' — என்று சும்மாவர் சொன்னார்கள்? வெள்ளை வேட்டிக்கு சற்று மதிப்பு அதிகம் தான்.

பேச்சாளிக்கு பரந்த அறிவு மிகவும் அவசியம். பரந்த அறிவு உள்ளவரை, அச்சம்-கிலி நெருங்குவதற்கு அஞ்சும்.

அத்துடன் கடினமான உழைப்புத்தேவை. சகிப்புத் தன்மை வேண்டும்.

ஆரம்பப் பேச்சாளர்கள் தோல்விகுறித்துக் கவலைப்பட்டு பேச்சுப் பயிற்சியைக் கைவிடாமல், தொடர்ந்து முயன்றால் நிச்சயமாகச் சிறந்த பேச்சாளனாக முடியும். ●

---

▌ வளர்ந்து வரும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் அசுத்தப் புகை அந்தச் சுற்றாடலிலுள்ள மனிதர்களை மட்டுமல்ல, மற்றெல்லாப் பிராணிகளையும், தாவரங்களையும் கூட, வெகுவாகப் பாதிக்கிறது. பிரிட்டனின் தொழில் நகரமான 'மான் சென்டரில், தொழிற்சாலைப் புகையைக்கட்டுப் படுத்தும் புதிய விதிகள் நடைமுறைக்கு வந்த பிறகு, அந்தச் சுற்றாடலிலுள்ள வீட்டில் பூச்சிகளின் நிறம் கூட மாறத் தொடங்கியிருக்கிறது!

# கேள்வி பதில்

## "சாமிஜி"

இ. சு. பிள்ளை, நெடுங்கேணி.

✱ 'சிவாஜி நடிக்கும் 70 எம். எம். படம் ராஜராஜ சோழன்' என்று குறிப்பிட்டிருந் தீர்கள். தவறு. அது 'சினி மாஸ்கோப், படந்தான். 'வெள் ளி'யில் இப்படித் தவருன செய் திகள் வரலாமா ?



எனக்கு சென்னையிலிருந்து கிடைத்த செய்திகளைக்கொண்டு மீண்டும் வற்புறுத்திச் சொல்கி றேன்: 'ராஜராஜசோழன்' தமி ழில் வெளிவரும் முதலாவது 70 எம். எம். படந்தான் !

சி. இ. கண்ணன், அல்வாய்

✱ இலங்கையில் இன்று தமி ழரது தொகையளவு சிங் கள மக்களும் சிங்கள மக்களது தொகையளவு தமிழரும் வாழ் ந்து கொண்டிருந்தால் அரசியல் நிலை எப்படியிருக்கும்?

சிங்கள மொழிக்குச் சம உரிமை இருக்காது. தங்கள் மொழிக்காகச் சிங்கள மக்களின் போராட்டம் தென்றலாக இராது; புயலாக இருக்கும்!

இரா. பெரியசாமி,
இறக்குவானை.

✱ உண்மையான பௌத்த நெறியைக் கடைப்பிடிக்கி ளுேம் எனக் கூறிக்கொள்ளும் இன்றைய இலங்கை அரசு இன, மொழி வேறுபாட்டுடன் சட்டங் களை நிறைவேற்றக் காரணம் என்ன?

எல்லா மதங்களுமே மனித ரால் மனிதருக்காக ஏற்படுத்தப் பட்டவையே. அவற்றின் நெறி களையும் அந்த மனிதர்கள் தமக் குத் தேவையான மாதிரி அவ் வப்போது வியாக்கியானம் செய்து கொள்ளுகிருர்கள். பிற இன, மத, மொழிகளுக்கு உரிய இடம் அளித்திருப்பதாகத்தான் பௌத்தர்கள் சொல்கிருர்கள்!

க. சி. கணேசன்
மகாவலை எஸ்டேட்

★ உலகிலேயே மனிதனுக்கு ஊக்கத்தையும் கூரிய அறிவையும் அளிக்கக் கூடிய சிறந்த நூல் எது?

உலகில் பலதரப்பட்ட மக்கள் வாழ்கிறுர்கள். ஒவ்வொரு தரத்தினருக்கும் வெவ்வேறு விதமான நூல் தேவைப்படும். பொதுவாகச் சொல்வதானுல் திருக்குறளை எடுத்துக் கொள்ளலாமே!

செல்வி. ராஜேஸ்வரி, களனி.

★ என் தோழி கூறுகிருள், கைரேகைக்கும் விஞ்ஞானத்துக்கும் ஏதோ சம்பந்தம் உண்டென்று! உண்மைதாஞ?

'கைரேகை சாத்திரம்' கடவுளைப் போல. உண்டென்றுர்க்கு உண்டு, இல்லை என்றுர்க்கு இல்லை!

தம்பி தயாநிதி, பெல்மதுளை.

★ வானத்து வெள்ளிக்கும் உங்கள் 'வெள்ளி'க்கும் வித்தியாசம் என்ன?

வானத்து வெள்ளி எட்டாத உயரத்தில் இருக்கிறதே!

சண்முகராசா, கொழும்பு-9.

★ தமிழர் கூட்டணிக் கட்சியின் கொழும்பு கூட்டத்தை பகிஷ்கரிக்குமாறு மாணவர் பேரவை என்ற போலிப் பெயரில் துண்டுப் பிரசுரம் வெளியிட்டது. அமைச்சர் குமாரசூரியர் என்று பேசப்படுகிறது — இது உண்மையா?

வதந்திகள் எதையுமே நம்பி விடக்கூடாது! தங்களுக்குப் பிடித்த வதந்திகளை நம்பி, மேலும் அதைப் பிரசாரம் செய்வது மனித இயல்பு!



க. சிவராசா, திருமலை.

★ தி. மு. க.வில் இப்பொழுது கருணாநிதிக்கு அடுத்ததாக மதிப்புள்ள தலைவர் நெடுஞ்செழியன்தானே ?

மதிப்புள்ள தலைவர் நெடுஞ்செழியன்தான். அவர் நல்லவர்; ஆனுல் வல்லவராயில்லாதபடியால் எப்பொழுதும் இரண்டாவது தலைவராகத்தானிருப்பார்!

ஜெயா, திருமலை.


★ வேலூர் நாராயணன் என்பவர்தாஞ 'சோ' என்ற புனை பெயரில் படங்களில் நடிப்பவர்?

வேலூர் நாராயணன் 'அலை ஓசை' என்ற பத்திரிகையை நடத்துபவர். தி. மு. க. விலிருந்து வெளியேற்றப்பட்டவர். சோ, 'துக்ளக்' ஆசிரியர். இருவருமே இன்று தி. மு. க. வின் எதிர் அணியில் உள்ளவர்கள்.

திருமலை சுந்தா, திருமலை.

★ ஈழநாட்டிலே 'தமிழ்க் கட்சி' ஒன்று ஆரம்பிக்க இருக்கிறேன். தங்கள் ஏடு எனது கட்சியின் ஏடாக மாற முன்முன்வருமா?

'வெள்ளி' எந்த ஒரு கட்சியினதும் பிரசார ஏடாக இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை!



'குணம்', மாத்தளை.

★ தமிழரசுக் கட்சியில் தலைவர்களில் இடதுசாரிகளின் மதிப்புக்குரியவர் யார்?

உடுவில் தர்மலிங்கம்! இவரும்,கோப்பாய் கதிரவேற்பிள்ளையும் தமிழரசுக் கட்சிக்குள் சோசலிஸக் கருத்துள்ளவர்கள் என்று கருதப்படுகிறது.

ஜே. சின்னத்தம்பி,
முகத்துவாரம்.

★ ஒரு தமிழ்ச் சிறு ஊழியன் பதவி உயர்வு பெறுவது அதே தொழிற்சாலையில் தொழில் புரியும் மற்றுமொரு தமிழ் உயர் அதிகாரிக்குப் பிடிப்பதில்லை. ஏன்?

பிடிப்பதில்லையா? எத்தனையோ தமிழ் உயர் அதிகாரிகள் தமக்குக் கீழ் உள்ள சிறு ஊழியர்களின் பதவி உயர்வுக்கு உதவியிருக்கிறார்களே! நீங்கள் கேட்பது குறிப்பிட்ட ஒரு ஊழியரைப் பற்றியதாயின், நான் எப்படிப் பதில் சொல்லமுடியும்? அதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம்!

'எஸ்ஸெஸ்', யாழ்ப்பாணம்.

★ ஒரே சமயத்தில் ஒரு ஆண் இரு பெண்களைக் காதலிக்க முடியுமா? அதேபோல ஒரு பெண் இரு ஆண்களைக் காதலிக்க முடியுமா?

முடிந்திருக்கிறதே! திரௌபதி ஐந்து ஆண்களைக் காதலித்தாள். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கூடத் தமிழ் நாட்டில் ஒரு ஆண் பல மனைவிகளை மணந்து காதலித்தான். காதல் என்பது தனது மன நிலைக்கேற்ப மனிதன் கற்பித்துக்கொண்ட ஒன்றுதான். மனநிலை சூழலினால் ஏற்படுவது. எமது இன்றைய சமூகச் சூழலில் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நியதிதான் நடக்கக்கூடியது; நடக்க வேண்டியது!

ந. இராசதுரை, முகத்துவாரம்.

★ இனி ஒரு தேர்தல் வந்தால் அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிடுவாரா?

போட்டியிடுவார்; நிச்சயம் வெற்றியும் பெறுவார்!

சா. சக்திதாசன்,
அக்கரைப்பற்று.

★ 28 மைல்களுக்கப்பாலுள்ள இந்தியாவுடன் இலங்கைப் பிரதமர் நட்புறவு கொள்ளாமல் பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள சீனாவுடன் நட்புறவு கொள்வதன் மர்மம் என்ன?

'மாவோ'விடம் எமக்குத் தருவதற்குச் 'ஸ்ரீ' (செல்வம்) இருக்கிறதே!



எம். ஜி. ஆரோடு செய்துகொண்ட ஐந்து வருட ஒப்பந்தகாலம் முடியுமுன்பே, மஞ்சுளா வெளியே வந்துவிட்டார். அந்த ஒப்பந்தம் மஞ்சுளா மைனராக இருந்தபோது செய்தது. இப்போது மஞ்சுளா மேஜர் ஆகிவிட்டார். மைனராக இருக்கும் போது செய்துகொண்ட ஒப்பந்தம் மஞ்சுளாவை இனிக் கட்டுப்படுத்த முடியாதாம் சிவாஜிகணேசனுடன் ஒரு புதிய படத்தில் நடிப்பதற்கு இப்போது மஞ்சுளா ஒப்பந்தமாகியுள்ளார். எப்படியிருந்தபோதிலும் எம். ஜி. ஆரோடு ஏற்பட்ட தொடர்புதான் மஞ்சுளாவுக்கு திடீர்ப்புகழை ஏற்படுத்தியது. தமது சொந்தத் திறமையால் தான் அந்தப் புகழை இனி மஞ்சுளா நிலைநாட்டிக்கொள்ள வேண்டும்!

காலமாகிவிட்ட ஜாவர் சீதாராமன் தமிழ் சினிமா உலகில் ஒரு புதுமையாக இருந்தவர். சென்னைக்கு வரும் ஆங்கிலப் படங்கள் ஒன்றையும் தவறவிடாமல் பார்ப்பார். புத்தகங்களும் நிறையப்படிப்பார். கதாசிரியராகவும், டைரக்டராகவும், சிறந்த குணசித்திர நடிகராகவும் விளங்கியவர் அவர்.

ஈழத்து வாசகர்களுக்கு அறிமுகமான ஆபிரகாம் கோவூர் எழுதிய நிகழ்ச்சிக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு 'புனர் ஜென்மம்' என்ற படத்தை மலையாளத்தில் தயாரிக்கிறார்கள். பிரேம்நஸீரும் ஜெயபாரதியும் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்கள். ஆபிரகாம் கோவூர் ஒரு மலையாளி. யாழ். மத்தியகல்லூரியிலும் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

காஷ்மீர்பற்றி இந்தியா தனது கொள்கைகளை மாற்றுவிட்டால் காஷ்மீர் இன்னொரு 'பங்களாதேஷ்' ஆக மாறிவிடும்!'' என்று ஷேக் அப்துல்லா கூறியிருக்கிறார். ஷேக் அப்துல்லா காஷ்மீரில் செல்வாக்குள்ள தலைவர். காஷ்மீரின் பெரும்பான்மை மக்கள் முஸ்லிம்களே. ஆயினும் இந்தியாவின் ராஜதந்திர நடவடிக்கைகளினால் காஷ்மீர் இன்னமும் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருக்கிறது. அழகிய காஷ்மீரை இழந்துவிடுவதற்கு இந்தியா ஒருபோதும் சம்மதியாது!

உலகின் சனத்தொகை அதிகரிக்கும் வேகம் மிகப்பயங்கரமாக இருக்கிறது. உலகம் தோன்றி இரண்டு லட்சம் ஆண்டுகளின் பின் சனத்தொகை 100 கோடி மட்டுமே இருந்தது. ஆனால் அதன் பின் நூறே ஆண்டுகளில் (1930ல்) 200 கோடியாகி விடுமென்கிறார்கள். சனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு உலகம் முழுவதும் ஒன்றுசேர்ந்து ஒரு பெரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் மிக விரைவில் வந்தே தீரும்!

# தோழர் வ. பொ. வுடன் பேசுங்கள்!


**சென்ற இதழில் வெளியான ஒரு கேள்வியும் பதிலும்:**

செ. பப்ரிஸ்ற் அன் சற்குணம், யாழ்ப்பாணம்.

★ தினமணி கதிரில் கருணாநிதி பதில் அளிப்பது போல எங்கள் சந்தேகங்களுக்கு தமிழர் கூட்டணித் தலைவர்களான அமிரோ அல்லது உடுப்பிட்டிச் சிவாவோ பதில் அளிக்க எங்கள் 'வெள்ளி' மூலம் வழி அமைப்பீர்களா?

''தமிழர் கூட்டணித் தலைவர்களுக்கு மட்டுமல்லாது, அரசாங்கத்தை ஆதரித்து நிற்கும் தலைவர்களும்கூட வாசகர்களுடன் சுவையாகவும் சுருக்கமாகவும் உரையாடத்தயாராக இருந்தால் அவர்களுக்காக இரண்டொரு பக்கங்களை ஒதுக்கித்தர 'வெள்ளி' தயாராக இருக்கின்றது!''

இந்த பதிலை எழுதிய கையோடு உடனடியாகவே இந்த நல்ல முயற்சியை ஆரம்பிப்பதென்று தீர்மானித்தேன்.



தோழர் வ. பொன்னம்பலம் ஒரு சிறந்த அரசியல்வாதி; சமூகத் தொண்டர்; இலக்கியத் துறையில் நாட்டமுள்ளவர்; கலாரசிகர்; ஒரு சஞ்சிகையை நடத்தி அனுபவமுள்ளவர். அவரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். மிக மகிழ்ச்சியோடு வாசகர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்க அவர் தமது சம்மதத்தைத் தந்து விட்டார்.

உங்கள் கேள்விகளை 'சாமிஜி'க்கு எழுதுவது போல அஞ்சலட்டைகளிலேயே எழுதுங்கள். கேள்விகள் தாக்கமாக இருக்கலாம்; நகைச்சுவையாக இருக்கலாம்; ஆனால் பண்பு தவறியதாக இருக்கக்கூடாது. அத்தகைய கேள்விகள் 'வ. பொ.'வின் பார்வைக்குப் போய்ச் சேராது! 23-8-72க்கு முன் எமக்குக்கிடைக்கத்தக்கதாக தோழர் வ. பொன்னம்பலம், 'வெள்ளி', 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்.

— ஆசிரியர்.




அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச வரதராசன்
அச்சுப்பதிவு : ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.